நவரச அண்ணா

விலை 40 காசு

பலகலைப் புலவர்,
தமிழ்க் "கா.சு" நினைவு இலக்கியக் குழு
ஈசுவரவடிவு அகம் - குழித்தலை,
திருச்சி மாவட்டம். 639 104.

1537



கிந்தனார்

# ஆரிய தாசனு திராவிடத் தோழனு

# தமிழ் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோ லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

**ஒன்றே குலம்**
**ஒருவனே தேவன்**

நவரச அண்ணு
துளி – 1
கோப்பை—1
15—9—71
வெளியிடுவோர் .
A. V. நாராயணன்,
9, ரங்கராஜபுரம்,
சென்னை-15
அச்சிடுவோர் :
M. ஆறுமுகம்,
பாரமவுண்ட் பிரிண்டர்ஸ், 31, மீரான் -சாகிப் தெரு,
சென்னை-2
ஆசிரியர் :
கிந்தனூர்
து. ஆசிரியர்கள் :
பிரேமோ தூதன்,
சுக்ராச்சாரியார்,
ஏவியென்.
புகைப்படம் :
சுந்தரம்
போன் : 440464
ஆண்டு சந்தா ரூ. 10
6 மாத சந்தா ரூ. 5
பெரியார் பதிப்பகம்
சென்னை-15



நான் மதத்திற்கு அப்பாற்பட்டவன் அல்ல, மதத்தின் பரிசோதகன். காவி கட்டாத இந்து! கைலி கட்டாத முஸ்லிம்! சிலுவை அணியாத கிருத்துவன் !

# சபதம் ஏற்போம்!

அண்ணா வந்தார்
அவனியிலே ஒரு விழிப்பு
அண்ணா பேசினார்
மேடையிலே ஒரு புதுமை
அண்ணா சிந்தித்தார்
பழமையிலே ஒரு மருட்சி
அண்ணா எழுதினார்
திரையிலே ஒரு புரட்சி
அண்ணா நடித்தார்
கலையிலே ஒரு கவர்ச்சி
அண்ணா விமர்சித்தார்
ரசனையிலே ஒரு சிறப்பு
அண்ணா வாதாடினார்
சபையிலே ஒரு பரபரப்பு
அண்ணா போராடினார்
ஆட்சியிலே ஒரு மாற்றம்
அண்ணா உறங்கினார்
உலகுக்கே ஒரு பேரதிர்ச்சி !!

**நாடு போற்றும் நவரச நாயகனும்**

இரண்டாம் வள்ளுவன்
இணையற்ற அறிவுச் சுடர்
நமது அண்ணனின்

சிந்தனைகளை
சீர்திருத்தக் கருத்துக்களை
கொள்கைகளை

என்றும் மறவாமல் கடைப்பிடித்து
நடந்து

தமிழ் சமுதாயத்துக்கு
அண்ணன் கண்ட தமிழரசுக்கு
அவரது வாரிசுகளுக்கு

உற்றத் துணையாக இருந்து
உழைத்து உயர்வோம்
இதுவே அண்ணனின்
63-வது பிறந்த நாளில்
நாம் ஏற்கும் சபதமாகும்!

# நவரச அண்ணாவின்

# எண்ண ரசம்

உலகின் பழைய நாகரீகங்களில் ஒன்று திராவிட நாகரீகம்—அதுதான் நமது நாகரீகம்!

உலகின் பழைய மொழிகளில் ஒன்று தமிழ்மொழி—அது தான் நமது மொழி!

வளங்கொண்ட மொழியும், சிறப்பான நாகரீகப் பண்பாடும் நமது சரித்திரச் சான்றுகள்!

ஆனால் இன்று நடைமுறையில் நமது நாகரீகமும், மொழி வளமும் சிதைந்து, வேறு நாகரீகங்களினால், மொழி களினால் சிதைக்கப்பட்டுக் கிடக்கிறது.

நல்ல வேளையாகத் தந்தைப் பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் தோன்றினர்கள்! நமது நாகரீகமும், மொழியும் புத்துயிர் பெற்றன.

பெரியார் அவர்கள் தளர்ந்துவிட்டார்கள். அண்ணா அவர்கள் மறைந்து விட்டார்கள்.

ஆனால் அவர்களுடைய பணி முடியவில்லை. அது தொடரவேண்டும். வரலாறு கற்பிக்கும் உண்மைகளை நாம் சிந்தித்து செழிக்க நமது பணிகள், நம் சந்ததியினரின் பணிகள் ஏராளம் உண்டு.

நமது சீர்திருத்தத் தலைவர்கள் நமக்குச் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிவிட்டார்கள். அதை நாம் மறக்காமல் சிந்தித்துப் பார்த்தால்போதும்; நாம் உயர்ந்து விடுவோம்.

மக்களுக்கு மறுமலர்ச்சியைப் பற்றி, அடிக்கடி நினை வுறுத்துவதற்காக நவரச அண்ணாவை தொடங்கியுள்ளோம். எங்கள் பணியினால் நாடு நலம் பெறவேண்டும்; தமிழர் நாகரீகமும், மொழியும் சிறப்படையவேண்டும் என்பதே எங்கள் பேரவா!

அதற்கு உங்கள் ஒத்துழைப்பு என்ன என்பதை சிந்தித்து ஆவன செய்யுங்கள். வணக்கம்.

# அடுத்த இதழில்




'நவரச அண்ணா' அடுத்த இதழின் அட்டைப் படம் இது. இவர்களின் பரிதாபத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார் — கிந்தளர்.

---

## முத்து நாட்டு மோகினி

என்னும் நாட்டு நடப்பு தொடர் கதையும் தொடங்குகிறது. இனிய கதை.

★ ★ ★

அடுத்த இதழ் எப்போது வெளிவரும்?

[விபரம் கடைசிப் பக்கம் பார்க்க.

# ஆரியதாசனா திராவிடத்தோழனா

— கிந்தனார் —

"திராவிட" என்ற வார்த்தையைக் கேட்டால் சிலர் முகம் சுளிக்கின்றனர். இன்றுகூட இந்த நிலைமை இருக்கிறது. ஏதோ சட்ட விரோதமான ஒரு சொல்லைப்போல் மிரளுவதையும் காண்கிறோம். ஆனால் "ஆரிய பவான்"— "ஆரிய சமாஜம்",—"ஆரிய வைத்தியசாலை", –"ஆரிய வைசியர்"—என்ற சொற்களை நடைமுறையில் காண்கிறோம். அதைக் கண்டு முகம் சுழிப்போர் இல்லை; முறுவலிப்போர் உண்டு.

நமது இனம் திராவிட இனம், நமதுநாடு திராவிட நாடு என்று வரலாறு கூறுகிறது. ஆராய்ச்சிகள் மெய்ப்பிக்கின்றன. இருக்கும் ஒன்றை இல்லாததுபோல் பிரமை கொள்ளச்செய்ய இடையில் வந்த ஒன்றால் எப்படி முடிந்தது என்பதை சிந்திக்க வேண்டும்.

ஆரியர் என்பவர்கள் இடையில் வந்து நம்முடன் கலந்தவர்கள் என்று ஆராய்ச்சிகளும் வரலாறுகளும் சந்தேகத்துக்கு இடமின்றி கூறுகின்றன. இடையில் வந்து புகுந்தவர் வலுத்தனர். இங்கு வாழ்ந்தவர் நலிந்தனர். ஏன் இப்படி ஒரு மாற்றம். எப்படி இது ஏற்பட்டது என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டாமா?

அண்டிபிழைக்க வந்தவர்களுக்கு உஷாரும், ஒற்றுமையும், சகிப்புத் தன்மையும், சமயம் பார்த்து சாதித்தலும் நிரம்ப இருக்கும். சீரோடு வாழ்பவர்களுக்கு செருக்கும், அலட்சியமும் இருக்கும்.

பிரயாணத்திலோ, வேற்று ஊரிலோ நமது ஊரைச் சேர்ந்தவர்களைப் பார்த்துவிட்டால் நாம் அவர்களிடம் நம்மை யறியாமல் ஒட்டுறவு கொள்வோம். தமிழ்நாட்டுக்கு வெளியே ஒரு தமிழ் நாட்டுக்காரரைப் பார்த்தால் நமது இனப்பற்றும், பாசமும் சிறிது தோன்றும். இப்படி பல தமிழர்கள் பம்பாய், டில்லி போன்ற பிழைக்க போன இடங்களில் அதிகமான வேற்றுமையுடனும், உஷாருடனும் இருப்பதுண்டு.

மொழிப்பற்றும், இனப்பற்றும் இல்லாத தமிழ்நாட்டில் யார் வந்தாலும் முதலில் அண்டியும், நாளடைவில் அதிகாரத் தோடும் வாழ்கின்றனர். வந்தவர்களை வரவேற்பதும், அவர்களை உயர்வாக மதிப்பதும், அவர்களின் பழக்க வழக்கங்களை பின்பற்றுவதும், தன்னைத்தானே—தாழ்த்திக் கொள்வதும் இந்த நாட்டின் இயல்பு.

சமீபத்தில் கிறித்துவமதமும், அதற்கு முன்னால் முஸ்லிம் மதமும், வந்து நிலைத்து நம் பழக்க வழக்கங்களில் இரண்டறக் கலந்தன.

அதேபோல் இந்து மதமும் ஒரு காலத்தில் தமிழகத்திற்கு வடக்கேயிருந்து வந்த மதம்தான். இந்து மதத்திற்கு "ஆரியமதம்" என்பதுதான் உண்மைப் பெயர்.

"ஆரிய மதம்" என்றப் பெயரைப் பார்த்த உடனே இது தமிழர்களின் மதம் அல்ல என்பது தெளிவு. ஏனெனில் தமிழர், தெலுங்கர், கன்னடர், மலையாளியர் இன்று மொழியால் பிரிந்து நின்றாலும், இனத்தால் ஒன்றுபட்டவர்கள்—"திராவிடர்கள்"—என்பது வரலாறு கண்ட உண்மை.

திராவிடர்கள் எல்லாம் ஆரிய மதத்தவர்களாக இருப்பதின் காரணம் என்ன ?

ஒரு மதத்தவர் தம் மதத்தை விட்டு வேறு மதத்தை ஏற்பது எளிதில் நடைபெறக் கூடியதல்ல. ஒன்று பலாத்காரம், அல்லது ஆட்சியின் அனுசரணை இருந்தால்தான் மதமாற்றங்கள் ஏற்படும்.

வெள்ளையர், முஸ்லீம்கள் ஆட்சிகாலத்தில் பதவிகள், உத்தியோகங்கள் பெற மதம் மாறியவர்கள் பலர். இன்றும் மத்திய அரசு உத்தியோகத்துக்காக இந்தி படிக்கவில்லையா அதுபோல.

திராவிடத்தில் ஆரியர்கள் நுழைந்து சூழ்ச்சியாலும், அரசியல் நிலைமைகளாலும், மன்னர்களை ஆரிய மதத்தை தழுவும்படி செய்துவிட்டனர். மன்னன் எவ்வழி, மக்களும் அவ்வழி.

ஒரு மதம் எந்த நாட்டில் தோன்றுகிறதோ அந்த நாட்டு மொழியில்தான் அந்த மதத்தின் வேதம் இருக்கும்.

முஸ்லிம்களின் வேதம் குர்ரான் அராபிய மொழியில் இருக்கிறது. ஏனெனில் அந்த மதம் அரேபியாவில் தோன்றியது.

கிறித்துவர்களின் வேதம் பைபில் லத்தீன் மொழியில் உள்ளது. அது பாலஸ்தீனத்தில் தோன்றியது.

இந்து மதத்தின் வேதங்கள் சமஸ்கிருதத்தில் உள்ளன. ஏனெனில் அது சமஸ்கிருதம் பேசும் பகுதியில், சமஸ்கிருதம் பேசுகிறவர்களால் ஏற்படுத்தப்பட்டது. அதனுல்தான் இந்து மதக் கடவுள்களை சமஸ்கிருத மந்திரங்கள் சொல்லி அர்ச்சிக்கின்றனர்.

இந்துமதம் ஆரியர்களின் மதம். அதன் வேதம் ஆரிய மொழியாம் சமஸ்கிருதத்தில் உள்ளது. அந்த அன்னிய ஆரியர்களின் மதம், தமிழர்கள் நாட்டில் நிலைத்து இன்று அது நமது சொந்த மதமாகத் தோன்றுகிறது.

அப்படியானுல் **தமிழர்களின் சொந்த மதம் எது?** ஆரிய மதம் இங்கு பரவுவதற்கு முன்னுல் தமிழனுக்கு என்று மதமோ, வேதமோ இருந்ததா இல்லையா? என்பது கேள்வி.

**தமிழர்கள் மத நம்பிக்கை இல்லாமல் நாத்திகர்களாக இருந்தார்களா?**

மத அபிமானிகளுக்கு "நாத்திக கொள்கை"கள் என்ருல்– ஏதோ தகாததுபோலவும், மிக வெறுக்கத்தக்கதாகவும் தோன்றுகிறது. "நாத்திக கொள்கை"கள் ஆபத்தானவையல்ல. அறிவார்ந்த கொள்கைகளுக்கு "நாத்திக கொள்கைகள்" என்று பெயர். நம்பிக்கைகளினுல் கொள்ளப்படும் கொள்கைகளுக்கு "மதக் கொள்கைகள்" என்று பெயர். மத அபிமானிகளுக்கு "நாத்திக கொள்கை"கள் என்ருல் எப்படி வெறுப்போ, அதேபோல் நாத்திகர்களுக்கு மதக் கொள்கைகள் வெறுப்பாகும்.

நமது முன்னோர்கள் (தமிழர்கள்) நாத்திகர்களாக இருந்தனர் என்ருல், அதற்காக அதிர்ச்சி அடையவேண்டியதில்லை.

**தமிழர்கள் முதலில் நாத்திகர்களாக இருந்து, பிறகு இந்து மதத்தை தழுவியிருக்க வேண்டும்.**

அல்லது

தமிழர்களுக்கு என்று ஒரு மதம் இருந்திருந்தால், அந்த மதம் எங்கே? தமிழர் மதத்தை அழித்துவிட்டார்களா? தமிழர் மதத்தின் வேதங்கள் அழிக்கப்பட்டனவா? தமிழர் மதத்தின் எல்லா அறிகுறிகளையும் பூண்டோடு ஆரியர்

அழித்தனரா? அப்படி அழித்தவர்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள் அல்லவா?

சிலர் கூறுகின்றனர் சைவ சமயம்தான் தமிழர்களின் மதம், சிவன்தான் தமிழர்களின் முழு முதற் கடவுள் என்று.

சைவ சமயம் வடநாட்டிலும் இருக்கிறது. சிவனின் இருப்பிடம் இமயமலை என்கிறது இந்து மதம். சிவனைத்தான் இந்து வேதத்தில் ருத்திரன் என்று சொல்கின்றனர். திராவிடர்களின் கடவுளை ஆரியர்கள் ஒருபோதும் அத்தனை உயர்வாக போற்றமாட்டார்கள். இது உறுதி. ஆரியர்களின் எண்ணமும் அப்படிப்பட்டது. தமிழகத்தில் மக்களே இல்லை; குரங்குகளும், அரக்கர்களும்தான் உள்ளனர் என்று புராணங்கள் எழுதிவைத்தும், அவதாரங்கள் எல்லாம் வடக்கேதான் தோன்றியதாக கதைகள் எழுதிவைத்தும், திராவிடர்களை "தஸ்யூக்கள்" என்று இழித்தும் கூறிய ஆரிய வெறியர்கள் திராவிடர்களின் கடவுளை தங்கள் கடவுள்களுடன் இணைத்துவைத்து போற்றியிருப்பர் என்பது அனுபவத்திற்கு ஒவ்வாததாகும்.

சிவன் தமிழ் கடவுள் அல்ல. ஆரிய மதம் இங்கு பரவிய காலத்தில் சிவன் என்னும் பெயரில் அழைக்கப்பட்ட கடவுளே பிரதானமாக வணங்கப்பட்டிருக்கிறார். ஆரம்பத்தில் ஆரிய மதத்தைக் கடைப்பிடித்த தமிழர்கள் அந்த ஆரிய மதக் கடவுளான சிவனை வணங்கி வந்தனர். பல நூற்றாண்டுகளுக்குப் பின்னால் வடக்கே வைஷ்ணவ மதம் தோன்றி சுலபமாகப் பரவி மெருகுபெற்றது. தெற்கில் வேரூன்றி போயிருந்த சைவம், வைஷ்ணவ மதத்தை சீக்கிரம் பரவ விடவில்லை; ராமானுஜர் போன்ற சில மதாச்சாரியார்கள் வைஷ்ணவத்தை பலவிதத்திலும் பரப்பினர். அப்பொழுது தமிழர்களுக்கு ஆரியக் கடவுளான சிவனை வணங்கும் மதம் தங்கள் சொந்த மதம் போலவும் (இன்று நமக்கு இந்து மதம் நம் சொந்த மதமாகத் தோன்றுவதுபோல) வைஷ்ணவ மதம் வடக்கத்தியர் மதம் போலவும் தோன்றியது. அப்படியே பிரச்சாரங்களும் செய்தனர். இந்த மன மருட்சிதான் சிவனை தமிழர்களின் தெய்வம் என்றும், சைவம் தமிழர் தம்மதம் என்றும் சொல்லக் காரணம்.

அதேபோல், முருகனும் தமிழ்க் கடவுளல்ல. ஆரிய மதத்தினர், தமிழர்களின் கடவுளை அத்தனை சீக்கிரம் ஆரியக் கடவுளின் உறவுக்காரனாக ஆக்கிவிட மாட்டார்கள்.

இந்து மதத்தில் கூறப்படும் கடவுள்கள் எல்லாம் ஆரியக் கடவுள்களே. அதில் எதுவும் தமிழ் கடவுள் இல்லை என்பது உறுதி.

மாரியம்மன், பத்திரகாளியம்மன், வீரன், மாடசாமி, கருப்பசாமி, முனியாண்டி என்று தமிழர்களாலேயே வணங்கப்படும் கடவுள்களை பிராமணர்கள் சூத்திரக் கடவுள்கள் என்று கூறுகின்றனர். சூத்திரக் கடவுள்களுக்கு பிராமணர் பூசை செய்வதில்லை. சூத்திரக் கடவுள்களுக்கு சமஸ்கிருதத்தில் மந்திரங்களும் கிடையாது.

ஆக ஆரிய மதப் பூசாரிகள் ஒருபொழுதும் தமிழ் கடவுள்களை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

அதனால் ஒன்று தமிழர்கள் இந்து மதத்தைப் பின்பற்றுவதற்கு முன்னால் மத நம்பிக்கை இல்லாத நாத்திகர்களாக இருந்திருக்க வேண்டும். அல்லது ஆரிய மதக்காரர்கள் தமிழ் மதத்தை பூண்டோடு அழித்திருக்க வேண்டும்.

பண்பாடு பக்குவப்பட்டிருந்த நாட்களிலேயே, அரசனின் ஆதரவு பெற்று மூவாயிரம் சமணர்களை மதுரையில் கழுவிலேற்றிய ஆரிய மதக்காரர்கள், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் நுழைந்தபோது தமிழ் மதத்தை அழித்திருப்பார்கள் என்று சந்தேகம் கொள்ளாமல் இருக்க முடியுமா?

சுத்த நாத்திகர்களாக இருந்த தமிழர்களை மத நம்பிக்கை கொள்ளச் செய்து மௌடீகர்களாக ஆக்கியது ஆரிய மதம். அல்லது தமிழ் மதத்தை பூண்டோடு அழித்தது ஆரிய மதம் என்று இரண்டுவித சந்தேகங்கள் கொள்ள இடமிருக்கிறது.

அப்படி நடந்திருந்தால் ஆரிய மதம் வெறுக்கப்பட வேண்டியதாகும். அழித்து ஒழிக்கப்பட வேண்டியதாகும். தமிழர்களுக்கென்று ஒரு ஆரியக் கலப்பற்ற மதக் கொள்கைகளை உருவாக்க வேண்டும்.

இதைக் கூறும்போது தமிழர்கள் ஏனோ தானோ என்று இருப்பர். ஆனால் தமிழகத்தில் உள்ள பிராமணர்களுக்கு கோபம் வரும். அப்படி அவர்கள் கோபம் கொண்டால் அது அறியாமையேயாகும்.

தமிழகத்திலுள்ள பிராமணர்கள் எல்லாம் ஆரியர்கள் அல்ல. ஆரியமதம் தமிழகத்தில் பரவிய காலத்தில், அதை முதலில் ஆதரித்து சேர்ந்த தமிழர்கள், அல்லது அந்தக்

காலத்தில் ஆரியர்களுக்கும் தமிழர்களுக்கும் பிறந்தவர்கள் தான் இன்று தமிழகத்தில் உள்ள பிராமணர்கள்.

தமிழகத்தில் வைஷ்ணவ மதத்தைப் பரப்ப பெருமுயற்சி எடுத்துக்கொண்ட ராமானுஜர் ஆதிதிராவிடர்களுக்குப் பயிற்சியளித்து, பூணூல் போட்டு பிராமணர்களாக்கினாராம். அவர்களும்கூட ஆரியர்களைப் பற்றி பேசும்போது, தாங்களும் ஆரியர்கள் என்று மருளுகின்றனர்.

பிராமணர்கள் தாங்கள் ஆரியர்கள்தான் என்று அழுத்த மாகச் சொன்னால், நிச்சயம் அவர்கள் தமிழ் சமுதாயத்தி னின்றும் ஒதுக்கப்பட வேண்டியவர்களே. ஏனெனில் ஆரியத்துக்கு என்றுமே தமிழனிடம் பற்று, பாசம் கிடை யாது. தமிழை தாழ்ந்ததாக எண்ணுவதுதான் ஆரியத்தின் இயல்பு. பிராமணர்களுக்கு சமஸ்கிருதத்தின்மேலும், வட நாட்டு கதைகள் பேரிலும் தனிப் பெருமை, பிரியம் உண்டு. ஆரிய மதத்தை ஆதரிக்கும் மற்றவர்களுக்கு இல்லாத சமஸ் கிருதப் பற்றும், தமிழ் புறக்கணிப்பும் பிராமணர்களுக்கு அதிகம் இருப்பது ஏன்? பிறப்பால்தான் உயர்ந்தவன் என்ற கர்வமும் பிராமணர்களுக்கு அதிகம் இருப்பது ஏன்?

இந்துமத சார்புடைய ஆட்சி தமிழகத்தில் பல ஆயிரக் கணக்கான ஆண்டுகள் நீடித்ததால், இந்து மதத்தின் முன்னோடிகளான பிராமணர்கள், தங்களை உயர்ந்தவர்கள் என்று ஆக்கிக்கொண்டனர். தமிழர்களும் அவர்களை "சாமி" என்று அழைத்து உயர்த்துவதாலும் அவர்களுக்கு இந்த கர்வம் ஏற்பட்டது.

பிராமணர்களும் நம்மைப்போல் மனிதர்கள்தான். தெய்வப்பிரவிகள் அல்ல. மதத்தின் பெயரால் சமுதாயத் தில் உயர்ந்த இடம் பெறுகின்றனர்.

மாட்டு மாமிசம் சாப்பிடும் வெள்ளையர்களுக்கு அளிக்கும் மதிப்பை, இந்த நாட்டில் பிறந்த படித்த தமிழர்களுக்கு பிராமணர்கள் அளிப்பதில்லை. அதுதான் பிறப்பால் ஏற்பட்ட, சமூக அமைப்பால் ஏற்பட்ட கர்வம்.

தமிழகத்தில் பல ஜாதிப் பிரிவுகள் உண்டு. ஆனால், பிராமணர்கள் மற்றவர்களைப் பற்றிப் பேசும்போது மொத் தத்தில் தமிழ் ஜாதி என்றுதான் பேசுகின்றனர். தாங்கள் வேறு இனம்போல் விலகி நிற்கின்றனர். தமிழர்களும் பிராமணர்களில் பலப் பிரிவுகள் இருந்தாலும் மொத்தத்தில்

அனைவரையும் பார்ப்பனர் என்றுதான் பேசுகின்றனர். இதிலிருந்தே தமிழ் சமுதாயம் இரு இனங்களாக பிரிந்து நிற்பது தெரியும்.

தமிழர்கள் எனும் திராவிட இனம், பிராமணர்கள் எனும் ஆரிய இனம் என்று பிரிந்து நிற்கின்றனர். தமிழர்களை திராவிட இனம் என்பது உண்மை. ஆனால் பிராமணர்கள் ஆரிய இனம் என்பது போலி.

பிராமணர்கள் தங்களை தமிழர்கள் என்று உண்மையை ஏற்றுக்கொண்டால் நாம் அவர்களை புறக்கணிக்க வேண்டியதில்லை. தமிழர்களில் பல ஜாதிகள் இருந்தாலும் எப்படி வேற்றுமை இன்றி பழகுகிறார்களோ அதுபோல் பிராமணர்களும் தமிழர்களோடு இணைந்து பழகினால் "இத்தனை காலம் விலகி வாழ்ந்தது போதும் சிகோதரனே, கிட்டவா" என்று அணைத்து மகிழ்வோம். ஆனால் அவர்கள் தொடாதே என்று நேரடியாகவோ, அல்லது "பண்பாடு", "கலாச்சாரம்", "ஜீவாதார உரிமை" என்ற அடைமொழிகளை சொல்லியோ தனித்து ஒதுங்கி நின்றால், தமிழர்கள் அவர்களை சகலதுறைகளிலும் ஒதுக்கியே தீரவேண்டும்.

தமிழர்களுக்கு என்று ஒரு மதம் இருந்திருக்கலாம் என்பதை எண்ணி பார்க்கக்கூட மறந்து, ஆரிய மதத்தின் ஒரு துண்டை எடுத்து, இதுதான் தமிழ் மதம், சுத்த சைவம் என்று பேசி, நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக தங்கள் சுய கௌரவம் இழந்து வாழும் தமிழர்கள்; இந்து மதம் ஆரிய மதம் என்னும் அப்பட்டமான உண்மையையும், இந்துமத முன்னோடிகள், அல்லது அந்த மத கோட்பாடுகளின்படி இந்துமத பூசாரிகளான பிராமணர்களும் தமிழர்கள் அல்லது ஆரியத் தமிழர்களே என்பதையும், திராவிடத் தமிழர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

அண்டி வந்தவர்களை எல்லாம் மதித்து ஆதரித்து தாழ்ந்துபோன தமிழர்கள், பிராமணர்களையும் தம்மிலும் உயர்ந்தவர்கள், வணக்கத்திற்குரியவர்கள், கடவுள் பிறவிகள் என்று எண்ணும் மனமயக்கத்திலிருந்து விடுபட வேண்டும்.

நமது சொந்த நாட்டில் நம்மை சூத்திரன், தீண்டத்தகாதவன் என்று இழிவுபடுத்தும் மதத்தையும், வேதத்தையும், அந்த மதத்தின் முன்னோடிகளையும் மதித்து போற்றி, கூனிக்குறுகி வணங்கி, அடியேன் தாசானுதாசன் என்று

கூறிக்கொண்டு வாழும் வாழ்வு தமிழர்களாகிய நமக்கு திராவிட இனத்துக்கு—இழிவில்லையா? சுமார் 50 வருடங்களுக்கு முன்னல் வரை இப்படி வணங்குவது தமிழர்களின் வழக்கமாக இருந்தது. இன்று வணக்கம் கூறுதல் மாறியிருந்தாலும், இந்து மதத்தில் நம்மைபற்றி கூறியிருப்பதும், பிராமணர்களின் மனத்தில் நம்மைபற்றி உள்ள நினைப்பும் மாறவில்லை. என்ன நாகரீகம் வந்தாலும், சீர்திருத்தங்கள் ஏற்பட்டாலும் பிராமணர்களின் மனப்பான்மை மாறப் போவது இல்லை. அப்படிபட்டவர்களை தாம் மேலாக மதித்து, சமுதாயத்தில் உயர்வான இடம் கொடுத்து, அவர்களின் பின்னல் செல்லும் பொம்மைகளாக சிந்திக்க வேண்டும்.

இன்னும் எத்தனை காலத்துக்கு தமிழ்நாடு ஆரிய மதத்தை இந்து மதம், இது "நம் மதம்" என்றும்; பிராமணர்களை ஆரியர்கள், உயர்ந்தவர்கள் என்றும் கூறிக்கொண்டு, அவர்களுக்கு தாசனுக இருக்கப் போகிறது. இந்த வாழ்வு தமிழனுக்கு இழிவில்லையா? எவ்வளவு படித்தாலும் என்ன பயன்? தமிழன் இதைப்பற்றி சிந்திக்க வேண்டாமா?

இப்படி ஆரியமத, பிராமணத்தாசர்களாக வாழ்ந்து தமிழர்கள் கண்ட பலன் என்ன? அறியாமையும், அடிபணிதலும் தானே!

நம் இனம், நம் நாடு, நம் மொழி என்று தமிழன் வீறு கொண்டெழுவது எந்தக் காலத்தில்?


தமிழனின் ரத்தத்தில் சூடேறுவது எந்தக் காலத்தில்?

தன் இனத்திற்கு தோழனுக, தன் இனத்தை அவமதிப்பவர்களை அழிப்பவனுக தமிழன் மாறுவது எந்தக் காலத்தில்?

இந்தக் காலத்திலேயே தமிழன் இன்னும் ஆரியத்துக்கு தாசனுக அடங்கிக்கிடக்கிருனே!

இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் வேண்டும் அவன் வெகுண்டெழுவதற்கு?

திராவிடத் தமிழர்களே ஆரியத்தையும், ஆரிய மதத்தையும், ஆரியக் கடவுள்களையும், ஆரிய மத முன்னேடிகளையும் தாம் ஆரியர் என்றும், உயர்ந்த இனம் என்றும் கர்வம் கொள்வோரையும் பற்றி சிந்தித்துப் பாருங்கள். அவர்கள்



இளங்கொடி அமுதப்ரியாவுக்கு "இரு செல்வங்கள்" நாடக ஆசிரியர் கன்னையா வசனப் புத்தகம் அளிக்கிறார்

நம் நாட்டிலேயே நம்மை இழித்தும், பழித்தும், "எட்டி நில்" என்றும் கூறுவதையும், அந்தக் கருத்துக்கள் உள்ள கதைகளையும் நம் எதிரிலேயே கூறித்திரிவதைப்பற்றி சிந்தித்துப் பாருங்கள். வடக்கே உள்ள அரசர்களின் மகிமைகளையும் கூறி, தெற்கை இழித்துபேசும் கதைகளை புராணங்கள் என்று சொல்வதோடு, அவற்றை நம் சொந்த இலக்கியங்களாக ஏற்றுக்கொண்டு. கண்மூடி வாழ்கிறோமே அதையும் சிந்தித்து பாருங்கள்...பலமுறை சிந்தித்து பாருங்கள். அப்பொழுதாவது நம் ரத்தத்தில் சூடுபிறக்கிறதா என்று பார்ப்போம்.

உழைக்கும் தமிழ் இனத்தை உயர்வுபேசி, சோம்பல் வாழ்க்கை வாழும் சொகுசு நாற்காலிகள் தாழ்பணிந்து வாழும் காலம் வந்துகொண்டேயிருக்கிறது.

திராவிடத் தமிழர்களே முதலில் நீங்கள் மொழிப்பற்றும், இனப்பற்றும், நாட்டுப்பற்றும் கொண்டு விழித்திருங்கள். அடிமை மனப்பான்மையை விட்டு சுயமதிப்புகொள்ளுங்கள்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணாவின் கருத்துக்களை படிப்பதோடு மட்டுமல்ல, பலமுறை படித்து, படித்து அதைப்பற்றி சிந்தித்துப் பாருங்கள்—தன்மானச் சூரியன் உதயமாவான்.

# கிந்தனரின் சிந்தனைகள்!

நீண்ட நெடுங்காலமாக ஆரியர்களுக்கும், முஸ்லீம்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் கீழ்பட்ட தமிழ்நாடு, அறிஞர் அண்ணு ஆட்சிப்பொறுப்பு ஏற்றதிலிருந்து சிறப்புபெறத் தொடங்கிற்று என்பது வரலாறு அளிக்கும் உண்மை.

கடந்த காலத்தில் தமிழகத்தில் ஆட்சி என்னும் பெயரால் நம்மை அடக்கி, அடங்காபிடாரித்தனமாக அலைந்த காங்கிரசார் சாதித்த சாதனைகளில் எல்லாம் பெயர் பெற்றது—

தமிழைப் புறக்கணித்தது, இந்திக்கு இடமளித்தது, அதற்காக மாணவர்களை பலியிட்டது, டில்லி எஜமானனுக்கு நன்றியுள்ள கூலியாக அலைந்தது— இன்னும் பல.

குறைந்தபட்சம் தமிழகத்திற்கு சொந்த பெயர் சூட்டுவதற்குகூட ஏளனம் பேசினர். அதற்காக உயிர்த் தியாகம் செய்தவர்களையும் கிண்டல்செய்து திரிந்தனர்.

இப்படிப்பட்ட "தியாகிகள்" மத்தியில்தான் அண்ணு பிறந்தார். தமிழுக்கு அழகு தந்தார், இனிமை தந்தார், ஆயிரமாயிரம் பேரை தமிழால் மயக்கினர், தன்மானத்தை தட்டி எழுப்பினர். தமிழ்த் தாய்க்கு அவர் செய்த சேவைகள், சிறப்புக்கள் ஏராளம்.

மனைவியைத்தா என்னும் மாண்புமிக்க மகேஸ்வரனையும், நிர்வாணமாக பிச்சையிடு என்று கேட்கும் நீதியற்ற கடவுளையும் பாடும் நிகண்டுகளா நமக்குத் தேவை? அவை நமக்கு வேண்டவே வேண்டாம்

* * *

மறு கண்டு, நதி கண்டு, மாநிதிகண்டு அல்ல ஒரு நாட்டை உலகம் மதிப்பது, அந்த நாட்டு மக்களின் மன வளத்தைக் கண்டே மாநிலம் மதிக்கும்.

—அண்ணு

# செப்டம்பர் தந்த

# சீர்திருத்தவாதி

தமிழர்களின் வாழ்வில் செப்டம்பர் இரண்டறக் கலந்த மாதம். செப்டம்பர் மாதம் 17-ந் தேதி தான் தந்தைப் பெரியார் பிறந்தார். அதே 17லில்தான் தி.மு.கழகம் துவக்கப் பட்டது. நமது பேரறிஞர் அண்ணுவும் செப்டம்பர் 15ல் பிறந்தார். தமிழகத்தின் தலைவிதியையே மாற்றியவர்களை அளித்த மாதம் செப்டம்பர். தந்தை பெரியார் அவர்களின் 93-வது இந்த பிறந்தநாளில் அவரை நாம் வாழ்த்தி வணங்குகிருேம். இன்னும் பல்லாண்டுகள் பெரியார் நல முடன் வாழ்ந்து, தமிழர்களுக்கு தன்மானத்தை ஏற்படுத்த வேண்டும் என்று ஆவல் கொள்கிருேம். தந்தையாரின் 93வது பிறந்தநாளில் அவர்கள் முன்ஞெரு முறை எழுதிய கட்டுரையும் பிரசுரித்துள்ளோம். படித்து சிந்திப்போம்.

"மனித சமுதாயத்தினிடம் ஒழுக்கம் நாணயம் குறைந்து விட்டது. பலாத்கார உணர்ச்சியும், கெடுதல் புத்தியும் வளர்ந்துவிட்டது. இதற்கு நமது மதம், ஜாதி என்பன வாகிய இரண்டும்தான் காரணம்.

கடவுளைப்பற்றி எனக்கு கவலை இல்லை. ஏனென்ருல் கடவுள் என்ருல் என்ன என்பது உலகில் யாருக்குமே தெரியாது. அது வெறும் வேஷம்தான்.

மதம் ஜாதி என்பது யாவருக்குமே தெரியும். மதம் என்பது மற்ற மதக்காரனிடம் துவேஷம், வெறுப்பு, இழிவு படும் தன்மை என்பவையாகும்.

"எந்த விதமான கூடாத, கேடான காரியத்தை செய்தா வது மதத்தைக் காப்பாற்றலாம்—காப்பாற்ற வேண்டும். அது

போலவே தானும் வாழவேண்டும்'' என்பதாகும். ஜாதியும் அது போன்றதே.

இந்து மதம்—பார்ப்பன ஜாதி என்பவை எந்த விதமான அதர்மத்தை செய்தாவது தர்மத்தைக் காப்பாற்று என்பதோடு, பிராமணன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள எந்த அதர்மத்தையும் செய்யலாம் என்பதாகும்.

அதுபோல கிருஸ்த்தவர், மகமது (இஸ்லாம்) மதங்கள் மனிதன் என்ன பாவத்தை செய்தாலும் சடங்கு, பிரார்த்தனை, தொழுகை மூலம் பாவமன்னிப்பு பெறலாம் என்பது.

இந்த விதிகளுக்கு கட்டுப்பட்ட மக்களிடம் ஒழுக்கம், நாணயம், யோக்கியம் முதலியவைகள் எதிர்பார்க்க முடியுமா? எந்த மனிதனுலாவது ஒழுக்கம், நாணயம், நேர்மை, யோக்கியம் ஆகியவைகள் உடையவனுக இருக்க முடியுமா.

பாவத்திற்கு (கேடு செய்ததற்கு) பிரார்த்தனையால், வேண்டுதலால், மன்னிப்பு கிடைக்கும் என்ற கடவுளை, மதத்தை வணங்குகின்ற கொள்கைகொண்ட எவனுல்தான் உலகில் யோக்கியனுக இருக்கமுடியும். அதனுல்தானே கடவுள் பக்தர்களிடம் வேஷத்தை தவிர ஒழுக்கத்தையோ, யோக்கியதையோ காணமுடிவதில்லை.

இப்பொழுது தெரிகிறதா? மனிதன் ஏன் அயோக்கியனுய் இருக்கிருன் என்பதற்குக் காரணம்.

ஆகவே கடவுள், மதம், ஜாதி ஆகியவை உலகில் இருக்கும் வரை எவரும் யோக்கியமாய் இருக்க முடியாது.

மனிதனுக்கு ஆசை இயற்கை, அதோடு அதற்காக எது செய்தாலும் மன்னிப்பு உண்டு என்ருல் என்ன ஆகும் என்பதை நீங்களே சிந்தித்தும், அநுபவத்தைக் கொண்டும் தெரிந்துகொள்வோமாக''.

# வெற்றி திலகங்கள்

## விஜிபி—விஜிஎஸ்

வெற்றி! புகழ்! பணம்!

கிடைத்தலும் நிலைப்பது அரிது.

நிலைத்தாலும் நேர்வழியில் நிற்பது அரிதினும் அரிது.

அகில உலகத் தலைவர்களை எல்லாம் தலைகீழ் ஆக்கிய இந்த "வெற்றியும், புகழும், பணமும்" விஜிபி சகோதரர்களிடம் வாலைச் சுருட்டிக்கொண்டு இருக்கிறது என்றால் அதன் காரணம் என்ன?

தெரிந்த காரணம்தான். ஆனால் அதை நாம் கடைப் பிடிப்பது மட்டும் மிக சிரமம்.

விஜிபி அன் கோவின் வெற்றியின் ரகசியம் 1. உழைப்பு, 2. நேர்மை, 3. ஒழுக்கம், 4. இதயம்.



V. G. பன்னீர்தாஸ்

இனநலத்தைப் பேணிக் காப்பதன் மூலம் எல்லாச் சிறப்பினையும் அடையலாம் என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவம் கூறிற்று. அந்த வள்ளுவர் நெறியைச் செயற்படுத்தி வெற்றிகண்ட பெரியார் தமிழின் வரலாற்றின் சிறப்பியாவார். அவர் தம் வாழ்நாள் வளர்வது, தமிழினத்திற்கு வைப்பாகும். பெரியார் தம் புகழ் தமிழினத்தின் புகழ்!

குன்றக்குடி அடிகளார்
—எம். எல். சி.

நரிக்குறவரின் திறந்தவெளி இல்லத்தில் டிரான்சிஸ்டர் பாடும் அளவுக்கு அவர்களை உயர்த்த முடியாது. அதை தனிப்பட்ட முறையில் செய்த வி. ஜி. பி.க்கு பத்மஸ்ரீ என்ற பட்டம் கொடுத்தால் மதிப்பு உயரும்- அந்த பட்டத்துக்கு.

தேடிவந்து கேட்டதை கொடுத்து "வாழ்க்கையை ரசித்து பாருங்கள்" என்று கூறும் வி. ஜி. பி. சகோதரர்களைப்போல் அகில உலகிலும் நிச்சயமாக ஒருவர்கூட இல்லை.

வி. ஜி. பன்னீர்தாஸ் அவர்கள் அமெரிக்கா சென்ற பொழுது அங்கு தவணை முறை விற்பனையாளர்கள் மத்தியில் தமது திட்டங்களை எடுத்துக் கூறினராம். அதைக்கேட்டு பிரமித்த அமெரிக்கர்கள் கூறியது என்ன தெரியுமா? "நீங்கள் எதைத் தெரிந்துகொள்ள இங்கு வந்தீர்கள். நாங்கள் அல்லவா உங்களைத் தேடி வந்து பல விஷயங்களை தெரிந்துகொள்ள வேண்டியதிருக்கிறது" என்றனராம்.

அந்த அமெரிக்கர்கள் ஒரு விஷயத்தை தெரிந்துகொள்ளவில்லை. வி. ஜி. பன்னீர்தாஸ் தமிழகத்தில் வீடு வீடாக தேடிப்போய் பொருள்களை கொடுக்கிறார். அமெரிக்காவைத் தேடிப்போய் திட்டங்களை கொடுக்கிறார். தேடிப் போய் கொடுப்பது அந்த மனிதரின்- நிறுவனத்தின்–இயல்பு என்பதை அமெரிக்கர்கள் புரிந்துகொள்ள அவர்கள்

தன் மகன் சான்றோன் எனக்கேட்டத்தாய் பெரு மகிழ்வு கொள்வாளாம்.

சான்றோன் எனக் கேட்டதற்கே இந்த மகிழ்ச்சி ஒரு அன்னைக்கு ஏற்படும் என்றால், தன் பிள்ளைகள் நல்ல உழைப்பால் உயர்வதையும், ஒழுக்க சீலர்களாக திகழ்வதையும், நேர்மையாளர்களாக விளங்குவதையும் தினமும் நேரில் கண்டு பூரிக்கும் தாய் எத்தனை மகிழ்ச்சிகொள்வார்கள். அவர்கள் பூரிப்புக்கு அளவேது. அந்த அரும் பெரும் பாக்கியம் வி. ஜி. பி. சகோதரர்களின் அன்னையார் திருமதி சந்தானம் அம்மையார் அவர்களுக்கே முழு உரிமையாக்கப் பட்டிருக்கிறது. இந்த வெற்றித் திலகங்களை நமக்குத் தந்த அந்த சந்தானப் பேழைக்கு நாடு மிகக் கடமைப் பட்டிருக்கிறது.

**அன்னை சந்தானம்மாள்**

இங்கு வந்து வி.ஜி.பி. நிறுவனத்தை கண்டுபோகத்தான் வேண்டும்.

உழைப்பால் உயர்ந்த வெற்றித் திலகங்கள் வி.ஜி.பி. சகோதரர்கள் வியாபாரிகள் மட்டுமல்ல, அவர்கள் தமிழர்கள் எல்லோருக்கும் சொந்தக்காரர்கள். செல்லப்பிள்ளைகள். நரிகுறவர்கள் விஷயத்தில் வி. ஜி. பி. யின் செயல்கள் தமிழக வரலாற்றிலேயே இல்லாத சாதனை. எந்த நிறுவனமும், ஆட்சியும் நரிக்குறவர்களை வி. ஜி. பி. யார் மதிப்பதுபோல் இத்தனை மதித்ததில்லை. வீடு, விலாசம் இல்லாத அவர்களை நம்பி டிரான்சிஸ்டரும், ரேடியோவும் கடன் கொடுக்கிறார்கள். மிக ஏழைகளான அவர்களும் நேர்மையாக பாக்கியை கொடுத்துவிடுகிறார்கள் என்றால் அதுதான் வி.ஜி.பி. உழைப்பின் பலன்.

நாம் வி.ஜி.பி.யாரிடமிருந்து பொருள்களை மட்டும் தவணை முறையில் வாங்காமல், உழைப்பு, நேர்மை, ஒழுக்கம் ஆகியவைகளையும் கொஞ்சம் பெற்றுக்கொள்வோம். நமக்கெல்லாம் உற்ற நண்பர்களாகத் திகழும் சகோதரர்களின் நிறுவனத்தின் வளர்ச்சியில் மேலும் ஒரு கிளை துளிர்த்திருக்கிறது.

இந்த மாதம் 3ந் தேதியன்று சென்னை மவுண்ட் ரோடில் மாபெரும் விற்பனை அரங்கம் ஒன்றைத் திறந்தனர். இந்தியாவின் மிகப்பெரிய காட்சியறைகளுள் இந்த அரங்கமும் ஒன்றாகும்.

இந்த திறப்பு விழாவுக்கு சென்னை முகம்மது இப்ராகிம் கம்பெனி மேனேஜிங் டைரக்டர் திரு. சுலைமான் சேட் தலைமை வகித்தார். மர்பி அதிபர் திரு. டி. டி. லக்கன் பால் அரங்கைத் திறந்து வைத்தார். வி. ஜி. பி. யின் செல்வன் மாஸ்டர் மர்பிதாஸ் ஒளிவிளக்கை ஏற்றிவைத்தார். வி. ஜி. பி. சகோதரர்களின் அன்னையார் சந்தானம் அம்மையார் புதல்வர்களை வாழ்த்தி ஆசி வழங்கினார். திரு. வி.ஜி. பன்னீர்தாஸ் வரவேற்று உரை நிகழ்த்தினார். திரு. வி.ஜி. சந்தோஷம் நன்றி வழங்கினார். விழாவில் சிலம்புச் செல்வர் ம. பொ. சி., நடிகர் சி. எல். ஆனந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நேர்மையான, மக்களின் சொந்தக்காரர்களான விஜிபி சகோதரர்களின் வளர்ச்சியில் வியப்பில்லை. அவர்களின் திட்டங்கள் அருமையானவை; அவர்களுக்கும், நமக்கும் ஒரே மாதிரி பலனளிக்ககூடியவை. நம்பிக்கைக்குரிய அந்த நல்லவர்களின் திட்டங்களை நம்பி நாம் முதலீடு செய்யலாம், பெருள்களை பெறலாம், நாணயத்தையும் நாம் கொடுக்கலாம். சென்னையில் விஜிபியின் கிளை வளர்வதுடன் பம்பாய், டில்லி, லண்டன், அமெரிக்காவிலும் விஜிபியின் கிளைகள் பரவ வேண்டும்.

# நல்ல செய்தி!

அக்டோபர் 15 முதல் நவரச அண்ணு மாத மிருமுறை 1 — 15 தேதிகளில் தொடர்ந்து .வெளிவருகிறது.

அத்துடன் டிசம்பர் முதல் நவரச அண்ணு பெரிய அளவில் **தினசரியாக** வெளிவருகிறது.

விபரங்களுக்கு :

**பெரியார் பதிப்பகம்**

போன் : 440464 சென்னை–15


# காலைப் பிடித்தது ஏன்?

அட்டைப் படத்தைப் பார்த்தீர்களா? சிவாஜி கணேசன், புரட்சி நடிகர் எம்ஜியாரின் காலைப் பிடித்துக் கொண்டிருக்கிருர். அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? எதற்காக காலைப் பிடிக்கிருர் என்று நினைக்கிறீர்கள் என் பதைச் சுருக்கமாக எழுதுங்கள். நல்ல கட் டுரைக்கு 25 ரூபாய் பரிசு தருகிறோம்.

—ஆசிரியர் : **'நவரச அண்ணு'**

சென்னை – 15



அண்ணன் புகழ்பாடி, நம்மை அடுத்துக் கெடுக்கவரும் பகைவனை வென்று, பல வாகை மாலை சூடியவர்கள் நாம். அவர் காலடியில் குவிக்கும் மலர்கள் எல்லாம், நம் கண்ணீரில் நனைந் திருக்கும், எனினும் அதனை நம் அண்ணன், தன் தம்பிகள் வாரி இறைத்திடும் பன்னீர் பூக்களென கொண்டிடுவார். கல்லறையில் கண்துயிலும் அந்த நல்லவரின் நீங்கா நினைவோடு, தமிழகத்தின் நீடுதுயில் நீங்கப் பாடுபடும் நம் கழகத்தின் வண்ணக் கொடியை வான்முட்டப் பறக்கவிடுவோம்.

——கழகத் தலைவர் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி

# திமுக திருமகளுக்கு 23வது பிறந்த நாள்

நமது திராவிட முன்னேற்றகழகம் அமைக்கப்பட்டு 22 ஆண்டுகள் நிறைவுபெற்றன. 17-9-1949ம் ஆண்டு, சென்னை ராயபுரம், இராபின்சன் பூங்கா மைதானத்தில் தி.மு. கழகத்தை துவக்கி வைத்து அறிஞர் அண்ணு பேசிய சரித்திரப் பிரசித்திபெற்ற சொற்பொழிவில் சில பகுதிகளை படித்து சிந்திப்போம்.

"திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிவிட்டது. திராவிடர் கழகத்திற்கு போட்டியாக அல்ல; அதே கொள்கைப் பாதையில்தான் திராவிடர் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளின் மீதேதான் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. திராவிடர் கழகம் எதற்காகப் பாடு பட்டதோ, எவருடைய நன்மைக்காக, எந்த சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக, ஏழை எளியவர்களை எளிமையிலிருந்து விடுவிக்க வாழ வழியற்ற மக்களுக்கு வாழ்க்கைப்பாதை வகுத்துக்கொடுக்க, இல்லாமையை இல்லாததாக்க, கொடுமையை ஒழித்துக்கட்டி எல்லோரும் ஓர் குலம் என்ற ஏற்பாட்டை வகுக்க, ஏற்படுத்தப்பட்டதோ, அதே கொள்கை வழிநின்று குறிக்கோளைப் புறக்கணிக்காது பாடுபட்டு வரும் திராவிட முன்னேற்றக் கழகம்.

பெரியார் நன்ருக வாழட்டும்; பத்து ஆண்டுக்கல்ல; இருபது ஆண்டுகள் வாழட்டும்! சீனக்கிழவரைப்போல, பர்மிய நாட்டுவயோதிகரைப்போல, வாழட்டும்! திராவிட முன்னேற்றக் கழகப் பெரும் பணியைக் கண்களால் காணட்டும்! அவர் கொள்கை திட்டம் நம்மால் நிறைவேற்றப் படுவதைக் கண்டு களிக்கட்டும். தவறு இருந்தால், திருத்தட்டும். போகும்பாதை தவறு என்ருல் சுட்டிக் காட்டட்டும். திராவிடர் கழகமாகட்டும் திராவிட முன்னேற்ற கழகமாகட்டும் படைவரிசை வேறு வேறு என்ருலும் கொள்கை ஒன்றுதான், கோட்பாடு ஒன்றுதான், திட்டமும் வேறு வேறு அல்ல; என்ற நிலை இருந்தே தீரும். படைவரிசை இரண்டுபட்டு விட்டது என்று எக்காளமிடும் வைதீக புலிக்கும், வடநாட்டு ஏகாதிபத்தியத்துக்கும் சம்மட்டியாக இருக்கவேண்டும். இரு கழகங்களும் இரு திக்குகளிலிருந்து வடநாட்டு ஏகாதிபத்தியத்தை ஒழித்து, வைதீகக் காட்டை அழித்து சமதர்ம பூங்காவைத் திராவிடத்தைச் செழிக்கச் செய்தல் வேண்டும். அதை விட்டு நள்ளிரவில் பூங்காவின் வேலியைத் தாண்டி பாத்தியை அழிக்கும் வேலிதாண்டிகள் வரக்கூடாது".

## வாசகர்களுக்கு!

நவம்பர் மாதம் வெளிவருகிறது

# நவரசம்

**சினிமா தினசரி பத்திரிகை**

விற்பனையாளர்களுக்கு விரைவில் தெரியப்படுத்துகிறோம்

(31ம் பக்கத் தொடர்ச்சி)

ஜானகிக்குத்தான்! கணவன் தரும் நற்சான்று! மிதிலை அரசிளங்குமரி, அயோத்தி இளவலின் அன்பு மனைவியின் அல்குலின் அளவு, அமைப்பு பற்றி அரியின் அவதாரம் கூறுகிறாராம்!

பாந்தள்-பாம்பின் படமும், தேர்-தேர்த்தட்டும். இவை-(ஆகிய) இவைகள், பழிபட-உவமையாகாததால் பழிப் படைய; பரந்த-பரவிய, அகலமான; பேர்அல்குல்-பெரிய அல்குலை உடையவளே! பாபம்! இந்த வர்ணனையைக் கேட்ட ஜானகி, எவ்வளவு வேதனைப்பட்டார்களோ நானறியேன், கணவன் மனைவியிடம் பேசும் மொழிதானா இது? இதுதான் கலையா? இதுதான் பக்தி ரசமா? பாந்தன், தேர்த்தட்டு எனும் இவைகளும் தோற்கும்படியான பரவைப் பேர்அல்குல் பற்றிய பாடல் இல்லாவிட்டால் பகவானின் அவதார மகிமையைப் பக்தர்கள் ரசித்திட முடியாது என்று கவி இதனை இவ்வளவு கவலையுடன் தீட்டினார் என்று கேட்கிறேன். இவ் விதமான கம்ப ரசத்தைப் பருகிக் களிப்பதா கலா ரசிகர் களின் கடன்? எனக்குக் குமட்டுகிறது தோழர்களே, உங்க ளுக்கு எப்படியோ?

# கம்ப ரசம்

புராணங்களில் உள்ள ஆபாசங்களை எடுத்துச் சொன்னால் பக்தர்களுக்கு கோபம் பொத்துக் கொண்டு வரும். சொன்னவர்களை ஒழித்துக் கட்ட பார்ப்பார். மௌடீகம் மலிந்து கிடந்த நாட்களில் அண்ணாவின் எழுத்துக்கள் எழுச்சி தந்தன. மத யானையை மிரள வைத்தன. அந்த வரிசையில் அண்ணாவின் "கம்ப ரசத்"துக்கு தனி இடம் உண்டு. புராணக் குப்பைகளை ஒதுக்கித் தள்ள சிந்தனை தேவை. இதற்கு கம்ப ரசம் பயன்படும். படியுங்கள்.

நான் முதலமைச்சரானபோது அடைந்த மகிழ்ச்சியைவிட எனது கட்சி தொண்டர்களுக்கு பரிசளிக்கும்போது அடைகிற மகிழ்ச்சியே அதிகம். ஏனென்றால் கழகத்தைப் பொருத்தவரை அந்தத் தோழர்கள்தான் அடிப்படைக் கல். நான் வெறும் கோபுரக் கலசம். கோபுரக் கலசம் நிலைத்து பளபளப்பாக இருக்கவேண்டுமானால், அடிப்படைக் கல் உறுதியாக இருக்க வேண்டும். அந்தக் கலசம் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக வியர்வையை கொட்டியவர்கள், இரத்தத்தை சிந்தியவர்கள் ஏராளம். அவர்கள் என்னைப் பின்பற்றி இருபது ஆண்டுகளாக நடை நடந்து வந்திருக்கிறார்கள்,

—அண்ணா

புலவர் பெருமக்கள் பூரிப்போடு கூறுவர், இராமரும் சீதையும் ஒருவரை ஒருவர் சந்தித்தக் காட்சியைக் கம்பர் வருணித்துள்ள வகையினை; குறள் அதிலே வைத்து இழைக்கப்பட்டிருப்பதைக் கூறி மகிழ்விப்பர். கண்ணொடு கண் கலந்த நேர்த்திதான் என்னே, என்னே, என்று கூறி வியப்பர். ஆம்! கண்ணைக் கண் கவ்விற்று என்று கனிவுடன் கூறுவர், உண்மைதான்! ஆனால் இராமரின் கண் செய்ய மற்றோர் செயலைமட்டும் அவர்கள் கூறுவதில்லை. கூறினால், கள்வண்ணம் வெளியாகி விடுமே என்ற கவலை கலாரசிகர்களுக்கு; பகவானின் செயல் மைனரின் செயல் போலவன்றோ தோன்றிவிடும் என்ற பீதி பக்தர்களுக்கு. எனவே இரு சாராருமே, அந்த சம்பவத்தைத் தீட்டுகையில் கண்ணைக் கண் சந்தித்ததை மட்டுமே கூறுவர்.

அவர்கள் கூறிக் களிக்கும் கவிதையும், கூறாது மறைத்திடும் கவியும் பால காண்டத்திலே மிதிலைக் காட்சிப் படலத்திலே இருப்பன. 35-ம் பாடல் அவர்கள் முறுவலுடன் கூறுவது; மூடிப்போட்டு விடுவது 36-வது செய்யுளை. முன்னையதிலே அவர்கள் பதப் பொருள், பொதுப் பொருள், புதுப்பொருள் எனப் பலப் பலவிதமாகக் கூறிடும் அடிகள்.

"கண்ணொடு கண்ணிணை கவ்வி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
வண்ணலு நோக்கினா னவளு நோக்கினாள்"

காலப்போக்கில் இனப்பற்று, பண்புக்குப் பதிலாகப் பகையை வளர்த்தது. ஓர் இனம் பிறிதோர் இனத்தின் நலத்தைச் சூறையாடிற்று. சுரண்டலும், சூறையாடலும், அவமதிப்பும் நிலவும் சமுதாயத்தில் பொதுமைச் சமுதாயம் தோன்ற முடியாது. இங்ஙனம், வரலாற்று ரீதியில் புகழ்பட வாழ்ந்த தமிழினத்தின் நலத்தை—மரியாதையை மற்றவர்களிடமிருந்து அரண்செய்து காப்பாற்றவே காலம் தந்த பரிசாகத் தோன்றியவர் பெரியார்.

குன்றக்குடி அடிகளார், எம். எல். சி.

இராமனின் கண் சீதையின் கண்ணைக் கவ்விற்றும்; சீதையின் கண் இராமரின் கண்ணைக் கவ்விற்றும்; இருவருக்கும் ஏககாலத்தில் ஒரேவிதமான இன்பம் உண்டானதால், இருவர் உணர்வும் நிலைபெயர்ந்து ஒன்ருகிவிட்டது. ஐயனும் நோக்கினுன்; அம்மையும் நோக்கினுள்; இது அவ்வடிகளின் பொருள். இத்துடன் தீரவில்லை காட்சி, 36-வது பாடல் இராமரின் விழி, சீதையின் விழியைக் கவ்வியதோடு நிற்காது, வேறு வேலையிலே ஈடுபட்டதைக் காட்டுகிறது. என்ன வேலை? வீதி திரியும் காளைக்குத் தரும் வேலைதான்! வேந்தனின் மகனுனாலும், விஷ்ணுவின் அவதாரமானுலும், கண்ணின் காரியமென்னவோ அவருடைய நிலைமை, அந்தஸ்துக்கு ஏற்றதாக இருக்கவில்லை. படியுங்கள் இப்பாடலை,

"நோக்கிய நோக்கெனு
    நுதிகொள் வேலினை
யாக்கிய மதுகை
    யான்ருே ளினுழ்ந்தடை
வீக்கிய கனைகழல்
    வீரன் செங்கணுந்
தாக்கணங் கனைய
    வடத்திற்றைத்தவே"

நோக்கிய நோக்கு எனும்—பிராட்டி பார்த்த பார்வையென்கின்ற; நுதிகொள் வேல்இணை-கூர்மையைக் கொண்ட வேலாயுதங்கள்; ஆக்கிய மதுகையான்-வளர்ந்த வலிமையையுடைய இராமனது; தோளின் ஆழ்ந்தன-புயங்களிலே அழுந்தின.

இது சீதையின் செயல்! தன்னைக் கண்டும் காணச் செய்தும் களிப்பூட்டிய காவலனின் தோள்மீது, அத்தோகையாளின் கண்கள் பாய்ந்து தங்கின. இராமனுடைய கண்கள் என்ன செய்தன? சீதையின் செந்தாமரை முகத்திலே மொய்த்தனவா? இல்லை! பாருங்கள், பாடலின் மற்ற இரு அடிகளை.

வீக்கிய கனைகழல் வீரன்-கட்டப்பட்டு ஒலிக்கின்ற வீரக் கழலையுடைய வீரனுன இராமனின்.

செங்கணும்—சிவந்த கண்களும், தாக்கு அணங்கு அனையவள் தனத்தில்-மோகினி என்னும் பெண் தெய்வத்தை நிகர் பிராட்டியினுடைய கொள்கைகளிலே, தைத்த-தைத்தன; பாய்ந்து சென்று தாங்கின.

எப்படி இருக்கிறது அண்ணலின் கண் வண்ணம்! இனி காளைகட்குக் கவலை ஏன்? கடவுளுக்கே கன்னியைக் கண்டதும் கண்கள் தனத்தில் தைத்திடுமாமே! இந்திரியங்களெனும் சட்டத் தோழர்களால் ஆட்டுவிக்கப்படுகிற சாமான்யர்களின் நிலைமை எப்படி இருந்தால்தானென்ன! மன்னனே இந்நிலையில் இருந்ததால்தான் போலும், அயோத்தியின் மதுகை மைந்தர்கள் மாதரின் மறைவிடம் தெரியுமா, தெரிசனம் கிடைக்குமா என்று தவித்துக் கிடந்ததாகக் கவி கூறியிருக்கிறார். மன்னனுக்கு ஏற்ற மக்கள். மக்களுக்கு ஏற்ற மன்னன்! கடவுள் ரசம் கடுகத்தனையும் காண இயலாத இக்காமரசத்தைத்தான் கலா ரசிகர்கள் விடமாட்டோம் என்று கூறுகின்றனர்.

கிடக்கட்டும், ஐயன் மேலிடத்தோடாவது விட்டாரா! மிதிலையை விட்டுச் சித்திரகூடம் செல்வோம் வாரீர். செம்பொன்னலான சிமிழ்போன்ற கொங்கை என்ற வர்ணனையுடன் இராமன் திருப்தி பெருமல், சீதையின் எதிரில் சீதையின் மறைவிடத்தின் மாண்பினை, அளவு, அமைப்பு, அழகு முதலியனவற்றை வர்ணிக்கிறார். என்மேல் கோபியாதீர், கம்பன் தாசர்களே! நானென்ன செய்வேன்? ஏட்டில் உள்ளதை நாட்டவருக்கு எடுத்துக் கூறுகிறேன்; நீங்கள் தானே கம்ப இராமாயணத்தைக் கல்லாத கசடரா அது பற்றிக் கருத்துரை கூறுவது என்று கனல் கக்கினீர். இதோ, கம்ப ராமாயணத்திலே கற்றதைச் சாற்றுகிறேன், விழியில் புனல் சோர நில்லாதீர்.

"ஆசைக்கினியவளே! ஆரணங்கே! பச்சைக் கிளியே! பசும்பொற் பதுமை!" என்ற சாதாரண மொழிகளைக் கேட்டிருப்பீர்கள். மனையாளின் மார்பக மாண்பினைக் கணவன் கூறக் கேட்டிருக்கமாட்டீர்கள். மனையாளின் மறைவிடத்தைப் பற்றி ஓர் மணாளன் மொழிந்திடக் கூடுமென்று எண்ணுவதே இழுக்கு என்று கூறுவீர்; உண்மைதான். **இந்த உலகிலே மத போதனைக்காக என்று மக்கள் கொண்டாடும் எந்தக் காவியத்திலும் காணமுடியாததைக் கம்ப ரசத்தில் காணலாம்.** அயோத்தியா காண்டம், சித்திரகூடப் படலம், 31-வது செய்யுள் முதல் அடியைச் சற்றே பாருங்கள். வனத்தின் வசீகரக் காட்சிகளைப் பிராட்டிக்குப் பெருமான் காட்டி வரும்போது மங்கையின் மனமகிழ மலருகிறாள், அங்க வர்ணனையை. அது இது,

பாந்தடேரிவை பழிபடப்
பரந்த பேர் அல்குல்

[27-ம் பக்கம் பார்க்க

# அண்ணாவின்

## வாழ்க்கைத் திருப்பங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கைப் பாதையையும், திருப்பங்களையும். அவருடைய 63-வது பிறந்த நாளில் எண்ணிப் பார்க்கிறோம். அண்ணனின் உழைப்பை அறிந்து கொள்ள கீழே உள்ள குறிப்புகள் ஓரளவு பயன்படும். நமது அண்ணன் பிறந்ததிலிருந்து, தி.மு. கழகத்தை அமைத்ததுவரை இதில் விளக்கமாக கொடுக்கப்பட்டிருக்கிறது.

''சொந்த நாட்டிலே சோற்றுக்கு வகையின்றி தங்க ஓடு போட்ட திருமண்டபத்தில் திருநடனம் புரியும் தில்லையானும், வைரக்கற்கள் இழைத்த விமானத்தில் படுத்துறங்கும் அரங்கநாதனும், வைர நாமத்தைச் சூட்டிக்கொண்டிருக்கும் வரதனும், வெள்ளி ரிஷப மேறும் சிவனும், தங்க மயில் முருகனும் தங்கியிருக்கும் தாய்நாட்டில் தாங்கள் வாழ்வதற்கு வழியின்றி, வெளிநாடு செல்லும் அந்தப் பரிதாபத்திற்குரிய தமிழர், கப்பல் தட்டில் நிற்கையில் இந்த நாட்டை வாழ்த்தியிருப்பார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களா ?''

— அண்ணா

1909 செப்டம்பர் 15.ந்தேதி அன்று பேரறிஞர் அண்ணு அவர்கள் காஞ்சிபுரத்தில் பிறந்தார்கள். தந்தை நடராசனர். தாய் பங்காரு அம்மாள். வளர்ப்புத்தாய் ராசாமணி அம்மையார்.

1916 நவம்பர் (அப்போது அண்ணு அவர்களின் வயது 7) திராவிட இனமக்களின் நலனை காக்க "தென்னிந்திய நல உரிமைச் சங்கம்" (நீதி கட்சி) தோற்றுவிக்கப் பட்டது. அதன் முதல் தலைவர் "வெள்ளுடை வேந்தர்" சர். பி. தியாகராயர்.

1917 டிசம்பர் 28-ந்தேதி (அப்போது அண்ணு வயது 8) சென்னை வெலிங்டன் தியேட்டரில் முதல் "நீதிக்கட்சி மாநில மாநாடு" நடந்தது.

1920 (அண்ணு வயது 11) தென்னகத்தின் மிகப்பெரிய காங்கிரசு தலைவராக விளங்கிய (பெரியார்) ஈ. வெ. ரா. அவர்கள், காங்கிரசு 'பார்ப்பனர்களின் சுயநல சங்கமாக மாறுவதை அறிந்தார். திருநெல்வேலி காங்கிரசு மாநாட்டில் "வகுப்புவாரி பிரதிநிதித்துவ அடிப்படையில் திராவிட இனத்தவருக்கு சலுகைகள் அளிக்க அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும்" என்ற கோரிக்கையை நிறைவேற்ற முயன்றார். இந்த தீர்மானத்திற்கு தொண்டர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்தது. ஆனல் காங்கிரசு மேல் மட்டத்தைப் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் தடுத்துவிட்டனர்.

நவம்பர் 20 தமிழக வரலாற்றில் முதல் பொதுத் தேர்தல் நடந்தது. நீதிக்கட்சி மிகப் பெரும்பான்மையாக வெற்றி பெற்று, தமிழகத்தில் முதல் அமைச்சரவை பதவி ஏற்றது. பதவி கிடைக்காததால், காங்கிரசுகாரர் நீதிக்கட்சியைக் காட்டிக்கொடுத்த கட்சி என்று தூற்றத் தொடங்கினர்.

1921 (அண்ணு வயது 12) தஞ்சாவூர் மாநில காங்கிரஸ் மாநாட்டிலும் (பெரியார்) ஈ. வெ. ரா. "வகுப்புவாரி பிரதிநிதித்துவ கோரிக்கை" தீர்மானத்தை கொண்டு வந்தார். மேல்மட்ட காங்கிரசார் தடுத்துவிட்டனர்.

1922 (அண்ணு வயது 13) திருப்பூர் மாநில காங்கிரஸ் மாநாட்டிலும் (பெரியார்) ஈ. வெ. ரா. "வகுப்புவாரி பிரதிநிதித்துவ கோரிக்கை" தீர்மானத்தை கொண்டு வந்தார். மேல்மட்ட காங்கிரஸ் (தாசர்கள்) தடுத்து விட்டனர்.

1923 (அண்ணு வயது 14) சேலம் மாநில காங்கிரஸ் மாநாட்டிலும் மறுபடியும் (பெரியார்) ஈ. வெ. ரா. "வகுப்பு

வாரி பிரதிநிதித்துவ'' தீர்மானத்தைக் கொண்டு வந்தார். மேல்மட்ட தூண்கள் தடுத்துவிட்டன.

நவம்பர் சென்னை மாகாணத்தில் இரண்டாவது பொதுத் தேர்தல் நடந்தது. இதிலும் நீதிக்கட்சியே வென்று மந்திரி சபை அமைத்தது.

1924 (அண்ணா வயது 15) திருவண்ணாமலை மாநில காங்கிரசு மாநாட்டிலும் (பெரியார்) ஈ. வெ. ரா. ''வகுப்புவாரி பிரதிநிதித்துவ'' தீர்மானத்தை மீண்டும் கொண்டு வந்தார். மேல்மட்ட திராவிட இன எதிரிகளால் தடுக்கப்பட்டது.

1925 மே 2 (அண்ணா வயது 16) (பெரியார்) ஈ. வெ. ரா. தொடங்கிய ''குடியரசு'' என்னும் வார இதழ் வெளியிடப் பட்டது.

ஜூன் 29 நீதிக்கட்சியின் முதலமைச்சர், ''வெள்ளுடை வேந்நர்'' சர். பி. தியாகராயர் இயற்கை எய்தினர்.

நவம்பர் காஞ்சிபுரத்தில் நடந்த காங்கிரசு மாநாட்டிலும் (பெரியார்) ஈ. வெ. ரா. ''வகுப்புவாரி பிரதிநிதித்துவ கோரிக்கை'' தீர்மானத்தைக் கொண்டுவந்தார். முன் போலவே பெரியாரின் தீர்மானம் தடுக்கப்பட்டது. பொறுமை இழந்தார். வெகுண்டெழுந்தார். ''காங்கிரசு கட்சியால் பார்ப்பனர் அல்லாதார் (திராவிடர்) நன்மை பெறமுடியாது. காங்கிரசை ஒழிப்பதே இனி என் வேலை'' என்று அந்த மாநாட்டில் அறைகூவல் விடுத்து, ஆத்திரத்துடன் வெளி யேறி, அங்கேயே, அப்போதே காங்கிரசு மாநாட்டுக்கு எதிராக திராவிட மக்களின் (பார்ப்பனர் அல்லாத) மாநாடு நடத்தினர். காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி யில் கல்வி பயின்றுவந்த அண்ணா இந்த நிகழ்ச்சிகளை கவ னித்தார். அண்ணாவின் அரசியல் கவனம் இப்படித் தொடங்கியது.

1926 (அண்ணா வயது 17) (பெரியார்) ஈ. வெ. ரா. ''சுயமரியாதை இயக்கத்தை'' தோற்றுவித்தார். தமது குடியரசு பத்திரிகையில் காந்தியின் 'இந்தி கொள்கையை எதிர்த்துக் கட்டுரை வந்தது. இதுதான் முதல் இந்தி எதிர்ப்புச் சிந்தனையின் ஆரம்பம்.

நவம்பர் சென்னை மாகாணத்தில் மூன்ருவது பொதுத் தேர்தல் நடந்தது. நீதிக்கட்சிக்கு பெரும்பான்மை இல்லை. நீதிக்கட்சியின் ஆதரவு மந்திரி சபை அமைக்கப்பட்டது. இந்த அமைச்சரவைதான் (பெரியார்) ஈ. வெ. ரா. வின்

"வகுப்புவாரி பிரதிநிதித்துவ" கோரிக்கையை சட்டமாக்கியது.

1927 ஜூலை (அண்ணா வயது 18) கோவையில் நீதிக் கட்சி மாநாட்டில் "பூரண மாகாண சுயாட்சி" வேண்டுமென்று தீர்மானம் நிறைவேறியது. (தமிழகம், ஆந்திரம், கர்னடகம், கேரளம், எல்லாம் சேர்ந்துதான் அப்போது சென்னை மாகாணம் என்று இருந்தது.)

1928 டிசம்பர் 16 (அண்ணாவின் வயது 19) நீதிக்கட்சியின் தலைவர் பனகல் அரசர் இயற்கை எய்தினர்.

1929 பிப்ரவரி 17 (அண்ணா வயது 20) செங்கல்பட்டில் முதலாவது "சுயமரியாதை மகாநாடு" நடந்தது. இதன் தொடர்பாக சென்னையில் 'சுயமரியாதை இளைஞர் மன்றம்' நிறுவப்பட்டது. பச்சையப்பன் கல்லூரியில் பயின்றுவந்த அண்ணா இம்மன்றத்தின் விவாத அரங்குகளில் கலந்து கொண்டு, இயக்கக் கருத்துக்களில் தெளிவுபெற்றார். அண்ணாவின் அரசியல் பாதை தொடங்கியது.

1930 (அ. வ. 21) காஞ்சிபுரத்தில் அண்ணாவுக்கும்' திருமதி ராணி அம்மையாருக்கும் திருமணம் நடந்தது' அண்ணாவின் இல்லற பாதை தொடங்கியது.

1931 (அ. வ. 22) "பெண்கள் சமத்துவம்" என்ற முதல் கட்டுரை எழுதினர் அண்ணா.

1932 (அ. வ. 23) பச்சையப்பன் கல்லூரியில் மாணவர் சங்கச் செயலாளராகவும், பொருளாதார கழகச் செயலாளராகவும் பணியாற்றினர். அண்ணாவின் அமைப்பு பணி தொடங்கியது.

1935 (அ. வ. 26) அண்ணா எம்.ஏ. பட்டம் பெற்றார். கோவிந்த நாயகர் பள்ளியில் ஆங்கில ஆசிரியராகப் பணி ஏற்றார். நீதிக்கட்சியுடன் தொடர்பு கொண்டார். அண்ணாவின் பொது வாழ்வு தொடங்கியது.

திருப்பூரில் நடந்த "செங்குந்தர் இளைஞர் மாநாட்டில்" அண்ணா முதன்முதலில் (பெரியார்) ஈ. வெ. ரா. அவர்களை நேரில் சந்தித்தார். இருவர் கருத்துக்களும் இணைந்தன. தமிழகத்தின் மறுமலர்ச்சி தொடங்கியது.

நீதிக்கட்சியின் சார்பில் அண்ணா சென்னை பெத்துநாயக்கன் பேட்டையில் மாநகராட்சி உறுப்பினர் தேர்தலில், காங்கிரசு வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிட்டார்.

காங்கிரசு வேட்பாளர் பணம், தமிழர்களின் 'பழமைப்பித்து' ஆகியவற்றின் துணையால் வென்றார். இந்த தேர்தலின் மூலம் அண்ணா சிறந்த பேச்சாளர் என்று பொதுமக்களின் முன் அறிமுகமானார். அண்ணா அவர்களை எதிர்த்து அன்றைய காங்கிரசுக்காரரான என். வி. நடராசன் வேலை செய்தார். அண்ணா முழு அரசியல்வாதி ஆனார்.

1937 (அ. வ. 28) பொதுத் தேர்தலில் நீதிக்கட்சி தோற்றது. காங்கிரசு ஜெயித்தது. மந்திரிசபை அமைத்தது. முதல் காங்கிரசு மந்திரிசபையில் சி. ராஜகோபாலாச்சாரியார் முதலமைச்சரானார். பதவி ஏற்றதும் சிறிதும் தாமதியாமல் இந்தியைத் திணித்தார். இதை எதிர்த்து காங்கிரசு தேனீ என். வி. நடராசன் அந்த கட்சியைவிட்டு வெளியேறினார். அண்ணாவின் அருமைத் தம்பியானார். இந்தி எதிர்ப்பு போர் (பெரியார்) ஈ. வெ. ரா. தலைமையில் தொடங்கியது. காஞ்சிபுரத்தில் சுயமரியாதை இயக்கத்தின் சார்பில் மாபெரும் "இந்தி எதிர்ப்பு மாநாடு" நடந்தது. (பெரியார்) ஈ. வெ. ரா. வும், அண்ணாவும் தமிழகமெங்கும் சூறாவளி சுற்றுப்பயணம் செய்து தமிழர்களை தட்டி எழுப்பினர். சென்னை ஒய் எம்.சி.ஏ. பட்டிமன்றத்தில் வார்தா கல்வி திட்டத்தை வெட்டி பேசி சி. ராஜகோபாலாச்சாரியாரை திகைக்க வைத்தார்

1938 (அ. வ. 29) தமிழகமெங்கும் முதல் எதிர்ப்பு போர் நடந்தது. காங்கிரசு அரசாங்கத்தின் அட்டூழியம் அளவு கடந்தது. விடுதலை ஏட்டின்மீது வழக்கு தொடுத்தது. 1200 பேர் சிறை சென்றனர். சிறைக் கொடுமை தாழாமல் தாளமுத்து, நடராசன் இருவரும் சிறையில் பிணமாயினர். இது தமிழ் மக்களுக்கு அதிர்ச்சி அளித்தது. இந்த போரினால் "தமிழ்நாடு தமிழருக்கே", "திராவிட நாடு திராவிடருக்கே" என்னும் லட்சியங்கள் உதயமாயின. (பெரியார்) ஈ. வெ. ரா., அண்ணா ஆகியோர்மீது காங்கிரசு அரசுவழக்கு தொடுத்தது. (பெரியாருக்கு) 3 ஆண்டு சிறைத் தண்டனை அளித்தது. முதலில் சென்னையிலும், பிறகு பெல்லாரி சிறையிலும் பெரியார் அடைக்கப்பட்டார்.

செப்டம்பர்-26 தமிழை காக்க புறப்பட்ட குற்றத்திற்காக, காங்கிரஸ் அரசு அண்ணாவுக்கு 4 மாத சிறை தண்டனை அளித்தது. அண்ணாவும், (பெரியாரும்) ஒரே கொட்டடியில் அடைக்கப்பட்டனர்.

நவம்பர்-13 இந்தியை எதிர்த்து தமிழ் நாட்டு பெண்கள் மாநாடு சென்னையில் நடந்தது. இம்மாநாட்டில் தான்

ஈ. வெ. ரா. அவர்களை "பெரியார்" என்னும் அடைமொழி சேர்த்து அழைப்பதென்று முடிவாயிற்று.

டிசம்பர் சென்னையில் கூடிய நீதிக்கட்சி மாநாட்டுக்குப் பெரியாரை தலைவராக தேர்ந்தெடுத்தனர். 'முழுதன்னாட்சி உரிமை' வேண்டுமென்று நீதிக்கட்சி குரல்கொடுத்தது.

"மாநிலத் தமிழர் மாநாடு" வேலூர் நகர் மன்றத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டில்தான் முதன்முதலில் "தமிழ் நாடு தமிழர்க்கே" என்று பேசப்பட்டது.

1939-மே (அ. வ. 30) பெரியார் விடுதலை ஆனார்.

அண்ணா விடுதலை பத்திரிகையின் துணை ஆசிரியரானார்.

டிசம்பர் 10- "தமிழ்நாடு தமிழருக்கே" நாளாக கொண்டாடப்பட்டது. அண்ணாவின் பேச்சு தமிழர்களை சிந்திக்கச் செய்தது. தமிழ் உணர்வை தட்டி எழுப்பினார்.

1940-பிப்ரவரி-21 (அ. வ. 31) தமிழ் உணர்வுக்கு காங்கிரஸ் முதலமைச்சர் சி. ராஜகோபாலாச்சாரியார் அடிபணிந்தார். கட்டாய இந்தி நீக்கப்பட்டது.

ஆகஸ்ட்-24 திருவாரூரில் கூடிய "நீதிக்கட்சி மாநில மாநாட்டிற்கு" பெரியார் தலைமைதாங்கினார். "தமிழ்நாடு தமிழருக்கே" என்னும் லட்சியம் "திராவிடநாடு திராவிடருக்கே" என்னும் லட்சிய தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. "திராவிடர்களுடைய கலை, நாகரிகம், பொருளாதாரம் ஆகியவை முன்னேற - பாதுகாக்கப்பட திராவிடர்களின் அகமாகிய சென்னை மாநிலம் இந்திய அமைச்சரின் நேர்பார்வையின்கீழ் ஒரு தனிநாடாக பிரிக்கப்பட வேண்டும்" என்பதுதான் அத்தீர்மானம். இதை வழிமொழிந்து அண்ணா ஆற்றிய சொற்பொழிவு மாபெரும் சரித்திர விளக்கமாக திகழ்ந்தது.

1941-(அ. வ. 32) பெரியாருடன் அண்ணா வடநாடு சென்று அம்பேத்கார், ஜின்னாவுடன் பேச்சு நடத்தினார். காங்கிரஸ் அரசு பதவி விலகியது. நீதிக்கட்சியை பதவி ஆட்சி அமைக்கும்படி கவர்னர் அழைத்தார். பெரும் புள்ளிகள் அரசமைக்க துடித்தனர். அது நாட்டுக்கு தீது என்று முடிவுசெய்து "கவர்னர் அழைப்பை ஏற்கக்கூடாது" என்று தீர்மானம் கொண்டு வந்தார். பெரியார் தீர்மானத்தை முன்மொழிந்தார். தீர்மானம் நிறைவேறியது கட்சியில் அண்ணாவுக்கு வெற்றிநடை தொடங்கியது.



விஜிபி காட்சி அரங்கம் திறப்புவிழாவில் அன்னை சந்தானம்மாள், வெற்றித் திலகம் V. G. சந்தோசம், சுலைமான் சேட் ஆகியோர் பங்கு கொண்டபோது.

---


1942-(அ. வ. 33) காஞ்சிபுரத்தில் "திராவிடநாடு" வார இதழ் தொடங்கினார் அண்ணா. அண்ணாமலை பல்கலை கழகத்தில் முதன் முதலில் மாணவர்கள் மத்தியில் பேசினார்.

1943-பிப்ரவரி 9-(அ. வ. 33) சென்னை சட்ட கல்லூரி மண்டபத்தில் ராமாயணத்தை எரிக்க வேண்டும் என்று வாதிட்டு சோமசுந்தர பாரதியாரை அண்ணா தோற்கடித்தார்.

மார்ச்-14, சேலம் செவ்வாபேட்டை பள்ளி மன்றத்தில் ராமாயணம், பெரியபுராணத்தை கொளுத்த வேண்டும் என்று வாதிட்டு சோமசுந்தர பாரதியாரை அண்ணா தோற்கடித்தார்.

அண்ணாவின் "ஆரியமாயை" நூல் வெளியானது.

திருவத்திபுரத்தில், புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் தலைமையில் அண்ணாவின் முதல் நாடகம் "சந்திரோதயம்" நடந்தது. இதில் அண்ணாவே நடித்தார்.



கோல்டன் ஸ்டார் கிரியேசன்சின் "இரு செல்வங்கள்" நாடகத் துவக்க விழாவில் பங்கேற்றவர்கள். இந்த நாடகத்தின் உரிமையாளர் P. V. கோவிந்தராஜன்.
டைரக்ஷன் : M. கணேஷ்.

---

1944-(அ. வ. 35) சேலத்தில் நடந்த நீதிக்கட்சி மாநாட்டில் பெரியாரின் தலைமைக்கு எதிர்ப்பு கிளம்பியது. அரும்பாடுபட்டு பெரியாரின் தலைமையை காப்பாற்றினார். பட்டம், பதவிதுறப்பு' சாதிப் பெயர்களை விட்டொழிப்பது, நீதிகட்சி என்னும் பெயரை "திராவிட கழகம்" என்று மாற்றுவது ஆகிய தீர்மானங்களை அண்ணா கொண்டு வந்தார். "இதற்கு அண்ணாதுரை தீர்மானம்" என்று மாநாட்டில் அழைக்கப்பட்டது. பெரிய புள்ளிகள் இத்தீர்மானத்தை தோற்கடிக்க முயன்றனர். 35 மணி நேர விவாதத்துக்கு பின்னர் தீர்மானம் நிறைவேறியது. அண்ணாவின் சொல்லாற்றல், ராஜதந்திரம் புகழ்பெற்றது.

1946 மே-(அ. வ. 37) மதுரையில் "கருஞ்சட்டை தொண்டர் படை" மாநாடு தந்தை பெரியார் தலைமையில் தொடங்கியது. அண்ணா மாநாட்டை திறந்துவைத்தார். காங்கிரசார் மாநாட்டு பந்தலுக்கு தீவைத்தனர். இதன் தொடர்பாக காங்கிரஸ் அரசு பாதிக்கப்பட்ட கருஞ்சட்டை படையை "சட்டத்துக்கு புறம்பான அமைப்பு" என்று அறிவித்தது. அண்ணா திராவிடநாடு இதழில் 'மரண சாசனம்' என்னும் தலையங்கம் தீட்டினார்.

ஜூலை 28-கவிஞர் பாரதிதாசனுக்கு ரூ. 25000 நிதி திரட்டி அளித்தார் அண்ணா. இது தந்தை பெரியாருக்கு பிடிக்கவில்லை.

சென்னை மாநில இடைக்கால காங்கிரசு அரசு தன் புத்தியை காட்டியது. இந்தியை திணித்தது. தமிழ்காக்க இந்தி எதிர்ப்பு போரை திராவிடர் கழகம் தொடங்கியது. அண்ணா போர் தளபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1947 ஆகஸ்டு 15-(அ. வ. 38) சுதந்திர நாள் அல்ல, "துக்க நாள்" என்றார் தந்தை பெரியார், "இன்ப நாள்" என்றார் அண்ணா. கருத்து மாறுபாடு. தமிழகமெங்கும் பரபரப்பு.

1948 மே 4-(அ. வ. 39) அண்ணா திராவிடநாடு இதழில் காங்கிரசாரின் பதவிப்போட்டி பற்றி விமர்சனம் செய்ததற்கு அதிகாரத்திமிரில் காங்கிரஸ் அரசு அண்ணா 'வகுப்புக் கலவரங்களை' தூண்டியதாக வழக்கு தொடுத்தது.

ஜூலை 17-காங்கிரசு அரசு மீண்டும் இந்தியை திணித்தது. தந்தை பெரியார் எல்லாத் துறைகளையும் சார்ந்த அறிஞர்களையும், அரசியல் தலைவர்களையும், ஒன்றாய் கூட்டி, சென்னை செயிண்ட் மேரீஸ் ஹாலில் 'இந்தி எதிர்ப்பு மாநாடு' ஒன்று நடத்தினார். அண்ணா வீர உரையாற்றினார்.

அக்டோபர் 23-ஈரோட்டில் நடந்த திராவிடர் கழக தனி மாநில மாநாட்டுக்கு அண்ணா தலைமை தாங்கினார். 'துக்க நாள்' பூசலுக்குப் பிறகு தந்தையும், அண்ணனும் இணைந்தனர். இந்தி எதிர்ப்பு போருக்கு முடிவெடுக்க, அண்ணா தளபதி ஆக்கப்பட்டார். இந்தக் கூட்டத்தில் அண்ணாவிடம் பெட்டி சாவியை பெரியார் கொடுத்தார். பூசல் தீர்ந்ததாக கழகத் தோழர்கள் மகிழ்ந்தனர். அஞ்சாநெஞ்சன் அழகிரி கடைசியாக கலந்துகொண்ட மாநாடு—பொது நிகழ்ச்சி இது.

1949 மார்ச் 28 (அ. வ. 40) அஞ்சாநெஞ்சன் அழகிரி இயற்கை எய்தினார். அழகிரியின் குடும்பநிதிக்கு அண்ணா ரூ. 6000 நிதி திரட்டி வழங்கினார்.

மே 14-கவர்னர் ஜெனரலாக இருந்த இராஜகோபாலாச்சாரியார், ரமணாசிரம நிகழ்ச்சிக்காக திருவண்ணாமலை வந்த போது, ரயிலடியில், அவர் வந்த விசேஷ ரயில் பெட்டியில், பெரியாரும், மணியம்மையும் சென்று அவரை கண்டு பேசினர்.

மே 24-கோவை முத்தமிழ் மாநாட்டில் அண்ணா பேசும் போது, கவர்னர் ஜெனரலைக் கண்டு பேசிய விவரத்தை

[42-ம் பக்கம் பார்க்க

# நாடக மேடை

கோல்டன் ஸ்டார் கிரியேசன்சின் "இரு செல்வங்கள்" என்னும் புதுமை நாடகத்தின் துவக்க விழா சென்னை – மாம்பலம், வெங்கிடேஸ்வரா கல்யாண மண்டபத்தில் 5-9-71 அன்று நல்லமுறையில் நடந்தது. விழாவுக்கு திரு. நவ ரசன்மல் தலைமை வகித்தார். உரிமையாளர் திரு. P. V. கோவிந்தராசன் அனைவரையும் வரவேற்றார்.

இந்த நாடகத்தில், நாடக உலகத்தையே அறியாத ஒரு குடும்ப பெண்ணை கதாநாயகியாக நடிக்க வைக்கப் போகிறார்களாம்.

இதைப்பற்றி உரிமையாளர் திரு. P. V. கோவிந்தராஜனிடம் கேட்டபோது "நாடகம், சினிமா போன்ற கலை உலகம் ஒதுக்கப்பட்டதல்ல, ஒரு சிலருக்கு மட்டும் உரிமையாக்கப் பட்டதுமல்ல. குடும்ப பெண்களும் நடனம், சங்கீதம் ஆகியவற்றைக் கற்றுக் கொள்வதில்லையா? அதுபோல்தான் நடிப்பும். நடிக்கத் தெரியாதவர்களையும், குடும்ப பெண்களையும் சிறந்த நடிகர்களாக ஆக்குவதுதான் அமெச்சூர் நாடகம் நடத்துபவர்களின் லட்சியமாக இருக்கவேண்டும். அமெச்சூர் என்றாலும் பொருள் அதுதானே" என்றார்.

நல்ல முயற்சி! வெற்றி விரைந்து வருக!

இந்த நாடகத்தின் கதை வசனத்தை மதுரை கன்னையா எழுதியிருக்கிறார். டைரக்‌ஷன் திரு. பழனீஸ்வரன் இசையமைக்க, திரு. R. லட்சுமண் குமார் நடன நாடக மேற்பார்வையையும் பொறுப்பேற்றுள்ளார். சினிமா நடிகர் சி. எல். ஆனந்தன் கதாநாயகனாக நடிக்கிறார். மற்றும் அமுதப்ரியா, ராகினி, உஷா, பேபி சாந்தா, சீதாலட்சுமி, ஸ்ரீதர், தேவநேசன், மாரியப்பன் ஆகியோரும் நடிக்கின்றனர். தீபாவளி சமயம் இந்த நாடகத்தை அரங்கேற்றி தொடர்ந்து படமாக்கவும் போவதாக உரிமையாளர் M. கணேசன் கூறினார்.

விளக்கவேண்டுமென்று பெரியாரை கேட்டுக்கொண்டார். பெரியார் அது தமது சொந்த விஷயம் என்ருர். கழகத்தவர் மனத்தில் கிளர்ச்சி.

மே 25-திராவிடநாடு பத்திரிகைக்கு ஜாமீன் ரூ. 3000 ஒரு மாதத்திற்குள் கட்டவேண்டும் என்று காங்கிரஸ் ஆட்சி கட்டளை இட்டது; கட்டத் தவறினுல் திராவிடநாடு பத்திரிகையை தடை செய்யப்படும் என்று ஆட்சி ஆர்ப்பரித்தது. இதைக்கண்டு கழகத் தோழர்கள் அண்ணனுக்கு ரூ. 3000 நன்கொடையாக வழங்கினர். ஜாமீன் கட்டிவிட்டு அண்ணு அப்பீல் செய்தார்.

ஜூன் 18-தந்தை பெரியார் தமக்கும் மணியம்மைக்கும் பதிவுத் திருமணத்துக்கு விண்ணப்பம் அனுப்பினுர்.

ஜூன் 19-விடுதலை ஏட்டில் "விளக்கம்" என்னும் தலைப்பில் தமக்கு யார் மீதும் நம்பிக்கை இல்லை என்று தந்தை பெரியார் ஓர் அறிக்கை வெளியிட்டார்.

ஜூன் 25-திராவிடநாடு இதழுக்கு அண்ணு ஜாமீன் கட்டினுர்.

ஜூன் 28-விடுதலையில் தந்தை பெரியார் அறிக்கை வெளியிட்டார். பெரியாரின் நிதிக்கும், அரசியலுக்கும் மணியம்மையார்தான் வாரிசு என்று குறிப்பிட்டார். கழகத் தோழர்கள் பேரதிர்ச்சி கொண்டனர். திகைத்தனர்.

ஜூலை 3-சென்னை, 186, கோவிந்தப்ப நாயக்கன் தெருவில், அண்ணு தலைமையில் கழக முன்னணி தலைவர்கள் பலரும் கூடித் தந்தை பெரியாரின் திருமண ஏற்பாட்டைக் கைவிடும்படி வேண்டுகோள் அறிக்கை வெளியிட்டனர்.

ஜூலை 9-பெரியார் மணியம்மை திருமணம் ரகசியமாக நடந்தது.

ஜூலை 10-திருச்சியில் திராவிட கழக மத்தியக் குழு பெரியாரின் திருமண ஏற்பாட்டை தடுத்து நிறுத்த ஒரு தூதுக்குழு அனுப்ப தீர்மானித்தது. கூட்டம் முடியும் நேரத்தில் நேற்றே பெரியாரின் திருமணம் நடந்த செய்தி கேள்விப்பட்டார் அண்ணு. நாடே பரபரப்பு அடைந்தது.

ஜூலை 30-சென்னையில் கழக முன்னணி வீரர்களின் கூட்டத்தைக் கூட்டினுர். அப்போது தின இதழ் தொடங்க

முடிவு செய்யப்பட்டது. எதிர்காலம் பற்றி யோசிக்கப் பட்டது.

ஆகஸ்ட் 10-அண்ணாவை ஆசிரியராகக் கொண்டு மாலை மணி தினப்பத்திரிகை வெளிவந்தது. இதில் தந்தை பெரியாரின் போக்கு பிடிக்காதவர்களின் பட்டியலைக் 'கண்ணீர் துளிகள்' என்ற தலைப்பில் வெளியிட்டார். பின்னால் இதே சொல்லை தந்தைப் பெரியார் ஏளனமாக பயன்படுத்தினார்.

செப்டம்பர் 3-திராவிடர் கழக மத்திய செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் சென்னை, பவழக்காரத்தெரு, 7-ம் எண் இல்லத்தில் கூடும்படி அண்ணா மாலைமணியில் அறிவித்தார்.

செப்டம்பர் 17-அண்ணாவின் ஆணைப்படி பவழக்காரத் தெருவில் கூடிய கூட்டத்தில் அண்ணா பேசவில்லை. ஓர் அறிக்கை எழுதி படித்துக் காட்டினார். ''பெரியாரின் தலைமை வேண்டாம், அதே சமயம் அவர்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேற்றி அவரைத் தாழ்த்தவும் வேண்டாம். அவரைத் தலைவராகக் கொண்ட திராவிடர் கழக அமைப் பிலே ஒட்டிக்கொண்டு இருக்கவும் வேண்டாம், அதே சமயம் திராவிடர் கழகத்தின் நல்ல கொள்கைகளை உதறித் தள்ளவும் வேண்டாம்'' என்பதே அந்த அறிக்கையின் சுருக்கம். இந்த கூட்டமும், அறிக்கையும் தான், ''திராவிட முன்னேற்றக் கழகத்தின்'' ஆரம்பம் ஆகும். சென்னை, ராயபுரம், ராபின்சன் பூங்காத்திடலில், (சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு கொட்டும் மழையில் பொதுக்கூட்டம் நடந்தது. அண்ணா 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்னும் அமைப்பைத் தொடங்கிவைத்தார். பெரியாரின் பிறந்தநாளை முன்னிட்டு, 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்னும் கட்டுரை தீட்டினார்.

செப்டம்பர் 18-அண்ணா தி. மு. க. வின் பொதுச் செய லாளராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

நவம்பர் 4-உயர்நீதி மன்ற விசாரணையில், திராவிட நாடு ஜாமீன் தொகை திருப்பித் தரும்படி தீர்ப்பாகியது. அண்ணாமேல் குற்றமில்லை என்றார் நீதிபதி. ஜாமீன் தொகை ரூ. 3000த்தையும், நன்கொடையாக அளித்தவர்களுக்கு திருப்பியளித்தார் அண்ணா.

தொகுத்தவர் : **பிரமோதூதன்**

# கலையுலக நவரசம்

பத்மினி சிறுவயதில் மிகவும் ஒல்லியாக இருந்தார். அதைக் கண்டு அவருடைய அம்மாவுக்கு மிகுந்த கவலை. பத்மினியின் பெரியம்மாவின் ஆலோசனை பேரில்தான் பத்மினி நாட்டியம் படிக்க ஆரம்பித்தாராம். பெரியம்மாவின் சிபாரிசு என்ன தெரியுமா? ''நடனமாடத் தொடங்கினல் ஒல்லியாக இருப்பவர்கள் பருமனுகி விடுவார்கள்; பருமனுக இருப்பவர்கள் ஒல்லியாகி விடுவார்கள்''.

* * *

நடிகைகள் ஏதாவது ஒரு பிராணியை பிரியமாக வளர்ப்பார்கள். நடிகர் எதுவும் வளர்த்ததாகத் தெரியவில்லை. ஆனல் நடிகர் பிரண்ட் ராமசாமி முன்பு ஒரு குரங்கை பிரியமாக வளர்த்து வந்தார். ஆனல், இப்போது அவரை யார் வளர்க்கிருர்களோ தெரியவில்லை.

* * *

தமிழ் நடிகை எம். என். ராஜத்துக்கு வேடிக்கை கணக்குகளும், புதிர்களும் போடுவது என்ருல் ரொம்ப விருப்பமாம். அதேபோல் ஏ. பி. நாகராஜன் அவர்களுக்கும் புதிர்களும், விடுகதைகளும் அதிகம் தெரியும். படப்பிடிப்பின் ஓய்வுநேரத்தில் இவர்களை சூழ்ந்திருப்பவர்களின் மூளையை கசக்கிபிழிந்து விடுவார்களாம். இல்லாதவர்களைப்பற்றி கவலை இல்லை.

* * *

ஒரு சமயம் பரணி ஸ்டுடியோவில் ஒரு படப்பிடிப்பின் ஓய்வு வேளையில் சரோஜா

சீமான்களின் சொகுசுக்குச் சுந்தரிகளைப் பலியிடும் சூழ்ச்சியோ நாட்டிய கலையாக இங்கு இருக்கிறது. இந்த நிலை மாற்றப்பட்டு மக்கள் வாழ்க்கையை வசீகரமாக்கும் வளமுள்ள கலையாக அது உயர்த்தப்பட வேண்டும்.

—அண்ணு

ஒரு கையில் திராட்சை பழக்கொத்தும், மற்ருேர் கையில் அதன் ரசமும் ஊற்றப்பட்ட பானக் கோப்பையும் ஏந்திக்கொண்டு, கண்கள் சுழல, ஆடை நெகிழ, கூந்தல் புரள, சிற்றிடை துடிக்க அவள் அருகே நடந்து வந்து, ஆஹா! ஐயோ! அப்பப்பா! போதுமே! இன்னமுமா முடியவே முடியாது என்று சரசமொழிகளை மொழிகிற போது சீமானின் காதிலே காலமெல்லாம் பாடுபட்டவனின் ஈனக்குரல், குமுறல், அழுகுரல், பெருமூச்சு, ஏறுமா?

அண்ணு

தேவி, இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரனிடம் "அன்னை நடை எப்படி நடக்கிறதுங்க" என்று கேட்டார். செந்தமிழில் சொற் சித்திரமாடும் இலட்சிய நடிகருக்கு ஒரே சிரிப்பு. அன்ன நடையை அன்னை நடையாக்கிய கன்னடத்து கதாநாயகிக்கு அந்த உச்சரிப்பையும் திருத்தி, நடையையும் நடந்து காட்டினுர். சரோஜாதேவி தமிழில் 100 படங்களுக்கு மேல் நடித்திருக்கிருர். இலட்சிய நடிகர் அந்த அளவுக்கு படங்களில் நடிக்கவில்லை.

* * *

சென்னையில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆரின் நாடோடி மன்னன் வெற்றிவிழா நடந்த சமயம். விழா மேடை உயரமாகப் போடப்பட்டிருந்ததால் நடிகர் நடிகைகள் அதில் ஏற சிரமப்பட்டனர். மேடைமீது நின்றிருந்த டைரக்டர் திரு. கே. சுப்ரமணியம் அவர்கள் ஏணியின் மேல்படியில் நின்று கொண்டு நடிகர் நடிகைகளுக்கு கைகொடுத்து மேலே அழைத்துகொண்டார். இதை கவனித்த டைரக்டர் ராஜா சந்திரசேகர் "புகழ் ஏணியின் உச்சிக்கு வர பலரையும் கை தூக்கி விட்டவரல்லவா? அந்த பழக்கம்" என்று சொன்னுர்.

* * *

பதின்மூன்று என்ற எண் துரதிர்ஷ்டம் பிடித்தது என்று மேல்நாட்டினர் நம்புகின்றனர். 13ஐ கண்டாலே நடுக்கம் ஆனுல் நம் நாட்டில் 13க்கு பயமில்லை. 8க்குத்தான் கெட்ட பெயர். நடிகை கண்ணும்பாவுக்கு 13 அதிர்ஷ்டமான எண் என்பது பலருக்குத் தெரிந்திருக்காது. நாடுகள்தோறும் நம்பிக்கைகள் வேறுபோலும்.

# அடுத்த இதழ் எப்போது?

நண்பர்களே! அடுத்த இதழ் அக்டோபர் முதல் தேதி வெளிவர வேண்டும். ஆனால் அடுத்த இதழை அக்டோபர் 15-ந்தேதி வெளியிட முடிவு செய்துள்ளோம்.

ஏனெனில், நவரச அண்ணா முதல் இதழ் வேலை நடந்து கொண்டிருக்கும்பொழுது எனது நண்பர்கள் சிலரும், சென்னை நகரின் பத்திரிகை விற்பனையாளர்கள் சிலரும் இது மிக சின்ன அளவாக இருப்பதாகவும், இந்த பத்திரிகையை இன்னும் பெரிய அளவில் வெளியிட்டால் சிறப்பாக இருக்கும் என்று அபிப்பிராயம் கூறினர்.

அவர்களது அபிப்பிராயத்துடன் வாசக நண்பர்களின் அபிப்பிராயமும், வெளியூர் விற்பனையாளர்களின் அபிப்பிராயமும் அறிந்து, பத்திரிகை அளவை மாற்றுவதா அல்லது இதே அளவில் வெளியிடுவதா என்று முடிவு செய்து மாற்றுவதற்கு கொஞ்சம் அவகாசம் தேவை.

அதனால் அக்டோபர் முதல் தேதி இதழை நிறுத்தி, அக்டோபர் 15 முதல் தொடர்ந்து மாதமிரு முறையாக வெளியிடுகிறோம். இத்துடன் நவரச அண்ணா தினசரி பத்திரிகையையும் வெளியிடப் போகிறோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இது முதல் இதழானதால் சிறிது தாமதமாக வருகிறது. அக்டோபர் 15 முதல் இதழ் தேதிக்கு இரண்டு நாள் முன்னதாகவே கிடைக்கும். அடுத்த இதழில் கார்ட்டூன், நகைச்சுவை, சிறு கதைகள் இடம் பெறுகின்றன.

விற்பனையாளர்களும், வாசகர்களும் ஒத்துழைப்புத் தருவார்கள் என நம்புகிறோம்.

பத்திரிகையின் பணியைப் பற்றியும், உங்கள் ஊரில் உள்ள பொது நிகழ்ச்சிகளையும், கேள்வி-பதில்களையும் எழுதி அனுப்புங்கள். உங்கள் எண்ணங்கள் பத்திரிகையின் உள்ளங்களாகட்டும்.

**உரிமையாளர்**

எங்கும் புகழ் பெற்றவை

# K. T. R.

கோபுர மார்க் பன்னீர்

பொன்னுங்கண்ணித் தைலம்


லவ் பேரட்ஸ் பத்திகள்

---

## K. T. R.

## வாசனுதி திரவியசாலை

விஜயபுரம்—திருவாரூர்—தமிழ்நாடு



## வெற்றித் திலகங்கள்

சென்னை மவுண்ட் ரோடு அண்ணா சிலைக்கு அருகில் 'விக்டரி ஹவுஸ்' என்ற வெற்றி மாளிகையில் இந்தியாவிலேயே பெரிய காட்சி அரங்கை தொடங்கியிருக்கும் **V. G. பன்னீர்தாஸ், V. G. சந்தோசம்** சகோதரர்களுக்கு எமது நல்வாழ்த்துகளை தெரிவிக்கிறோம்.

தவணை முறையில் எது வேண்டுமானாலும் இந்த காட்சி அரங்கில் கிடைக்கும்.

அடுத்த ஆண்டு டெலிவிஷன் கொடுக்க இப்போதிருந்தே VGP நிறுவனம் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். தேவைக்கு சந்திக்கவும்.

**V. G. பன்னீர்தாஸ் & கோ.**

சைதாப்பேட்டை, மாம்பலம், ராட்டன் பஜார்,
மவுண்ட் ரோடு.